பக்கங்கள் எட்டு

விலை ரூபா 5.00

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்


# வலம்புரி
VALAMPURI


உள்ளே →
க. பொ. த. சாதாரணதர மாணவருக்கான சைவசமயம் பகுதி 1
நாளை
சங்கீதம் பகுதி 1
சாதிரி வினாத்தாள்

சங்கு 01 வள்ளுவர் ஆண்டு 2031 ஆவணி 18 ஞாயிற்றுக்கிழமை (03-09-2000) தொ. பேசி; 3378 ஒலி: 258

## பொதுமக்கள் காணாமல் போதல் இலங்கையில் தொடர்ந்து அதிகரிப்பு

### சர்வதேச மன்னிப்புச்சபை கண்டனம்

இராணுவத்தினரால் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள பொதுமக்கள் காணாமல் போகும் சம்பவங்கள் இலங்கையில் அதிகரித்து வருவதாக சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையில் கண்டனம் தெரிவித்து குற்றம் சாட்டியுள்ளது. சர்வதேச மன்னிப்புச் சபை கடந்த வியாழக்கிழமை லண்டனில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தனது கண்டனத்தையும் குற்றச்சாட்டையும் தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, அவசரகால சட்ட விதிகளுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படுதலே மனித (8 ஆம் பக்கம் பார்க்க)

## கன்னிமரியாளை அவமதிக்கும் நூலை எழுதிய ஆசிரியர் கைது

கத்தோலிக்க கன்னிமரியாளை அவமதிக்கும் வகையில் நூல் ஒன்றை எழுதி வெளியிட்ட சிங்கள எழுத்தாளர் மஞ்சுள வைத்தியரட்ண பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார். சிங்கள எழுத்தாளரான மஞ்சுள வைத்தியரட்ண சிங்கள மொழியில் கன்னிமரியாளை அவமதிக்கும் வகையில் எழுதி வெளியிட்டமை தொடர்பாக தென்னிந்திய திருச்சபை எழுப்பிய ஆட்சேபனையை அடுத்தே பொலிசார் இ ரக்கைது செய்தனர். இந் நூலை வெளியிடுவதற்கு முன்பு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தடைவிதித்திருந்ததும் தடையை மீறி இந்நூல் வெளியிடப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (வ)

### ★ யாழ். குடாநாட்டை அதிரவைக்கும் பல்குழல் பீரங்கி

# புத்தூர் - வாதரவத்தையில் மோதல்

# தென்மராட்சியில் புகைமண்டலம்!

### மக்கள் மத்தியில் பதற்றம்; பீதி!

(யாழ். அலுவலக நிருபர்)

வலிகாமப் பகுதிகளிலிருந்து நேற்று அதிகாலை முதல் ஏவப்பட்ட பல்குழல்பீரங்கி வேட்டுக்கள் தென்மராட்சிப் பகுதியில் வீழ்ந்து வெடித்த வண்ணமிருப்பதாகவும் அப்பகுதி ஒரே புகைமண்டல மாகக் காட்சி அளிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று அதிகாலை முதல் இடம்பெற்று வரும் பல்குழல் பீரங்கித் தாக்குதலின் மத்தியில் யுத்தக்ஹெலிகள் மோதல் இடம்பெறும் பகுதிகளில் சரமாரியான 50 கலிபர் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்த வண்ணமிருந்தன. இதனால் வலிகிழக்குப் பகுதி மக்கள் மத்தியில் பதற்றமும் பீதியும் நிலவியது.

வலிகாமம் பகுதியில் இருந்து ஏவப்பட்ட பல் குழல் பீரங்கி ஷெல்கள் தென்மராட்சிப் பகுதிகளில் மக்கள் குடியிருப்புக்கள் மீது வீழ்ந்து வெடிப்பதினால் அப் பகுதி

பகுதிகளில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பாரியமோதல் சம்பவம் இடம் பெற்றதாகவும், பரஸ்பரம் இருவரும் ஷெல் பீரங்கித் தாக்குதல்

பெயர்ந்துள்ளமையால் ஏவப்படும் பல்குழல் பீரங்கிகளினால் உயிர்ச் சேதம் பெரும்பாலும் தவிர்க்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (8 ஆம் பக்கம் பார்க்க)

## சொல்லின் செல்வர் இராசதுரை மீண்டும் தேர்தல் களத்தில்

(கொழும்பு)

மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பிரதிய அமைச்சர் செல்லையா இராஜதுரை மட்டக்களப்பில் தேர்தலில் குதிக்கவுள்ளார்.

எம். எச். எம். அஷ்ரப் தலைமையிலான தேசிய ஐக்கிய முன்னணியின் சார்பிலேயே இவர் இத்தேர்தலில் போட்டியிடவுள்ளார். (8 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழரசுக்கட்சி வேட்புமனு நிராகரிப்பு!

(வவுனியா)

அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி என்னும் பெயரில் வன்னி மாவட்ட பொதுத்

ரிக்குமாறு தேர்தல் ஆணையாளர் வவுனியா தெரிவத்தாட்சி அதிகாரிக்கு அறிவித்துள்ளார்.

இருந்து ஏவப்பட்ட பல் குழல் பீரங்கி ஷெல்கள் தென்மராட்சிப் பகுதிகளில் மக்கள் குடியிருப்புக்கள் மீது வீழ்ந்து வெடிப்பதினால் அப் பகுதி ஒரே புகை மண்டலமாகக் காட்சி அளித்த வண்ணம் இருந்தன.

புத்தூர் வாதரவத்தைப் ...ருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பாரியமோதல் சம்பவம் இடம் பெற்றதாகவும், பரஸ்பரம் இருவரும் ஷெல் பீரங்கித் தாக்குதல்களில் ஈடுபட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தென்மராட்சிப் பகுதியில் மக்கள் ஏற்கனவே இடம் ...படும் பல்குழல் பீரங்கிகளினால் உயிர்ச் சேதம் பெரும்பாலும் தவிர்க்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (8 ஆம் பக்கம் பார்க்க)

(வவுனியா)

அகில இலங்கைத் தமிழரசுக் கட்சி என்னும் பெயரில் வன்னி மாவட்ட பொதுத் தேர்தலுக்கு கையளிக்கப்பட்ட வேட்பு மனுவை நிராகரிக்குமாறு தேர்தல் ஆணையாளர் வவுனியா தெரிவத்தாட்சி அதிகாரிக்கு அறிவித்துள்ளார்.

1989 ஆம் ஆண்டு மார்ச் (8 ஆம் பக்கம் பார்க்க)

## வாக்குப் பெட்டிகளை ஹெலி மூலம் எடுத்துச் செல்ல ஏற்பாடு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று இடங்களில் உள்ள வாக்குச்சாவடிகளுக்கு வாக்குப் பெட்டிகளை ஹெலி மூலம்கொண்டு செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட தேர்தல் அதிகாரி மோகனகுருசாமி தெரிவித்துள்ளார்.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி, யாழில் சிங்கள உறுமய

(யாழ்ப்பாணம்)

திலக் கருணாரட்ண தலைமையிலான சிங்கள உறுமயக் கட்சி எதிர்வரும் பொதுத் தேர்தலில் வன்னி, யாழ். மாவட்டங்களில் போட்டியிடுவதற்காக தமது வேட்பாளர்களுக்கான நியமனப் பத்திரங்களை நேற்று தாக்கல் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## வன்னியில் 11 அரசியல் கட்சிகள் வேட்புமனுத் தாக்கல் செய்தன

(வவுனியா)

வன்னி மாவட்டத்தில் எதிர்வரும் பொதுத் தேர்தலுக்கான நியமனப் பத்திரங்களை அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், ஐக்கிய தேசியக் கட்சி, ஈ.பி.டி.பி. ஆகிய கட்சிகள் நாளை இங்கட்கிழமை தாக்கல் செய்யவுள்ளன.

ஐக்கிய தேசியக் கட்சியில் (8ஆம்பக்கம் பார்க்க)

## டக்ளஸ் தேவானந்தாவுக்கு ‘உதயன்’ ஆசிரியர் நன்றி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினால் யாழ். இந்துக் கல்லூரிக்கு நிதி ஒதுக்கப்பட்டமைக்கு கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுக்கு யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் தனது நன்றியைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக யாழ். இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கச் செயலாளரும் உதயன் பத்திரிகை இணை ஆசிரியருமான என். வித்தியாதரன் நேற்று ஈ.பி.டி.பியின் யாழ் தலைமைச் செயலகத்திற்குச் சென்று டக்ளஸ் தேவானந்தாவிற்கு தனது நேரடியான நன்றியைத் தெரிவித்தார்.

யாழ். இந்துக் கல்லூரியின் புதிய விடுதிக் கட்டடத்துக்கென டக்ளஸ் தேவானந்தாவால் 70 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந)

## அம்பாறையில் ஒரே சின்னத்தில் போட்டியிட த. வி. கூட்டணி மறுப்பு

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் சகல தமிழ் அரசியல் கட்சிகளும் ஒரே சின்னத்தில் போட்டியிட வேண்டும் என்ற தமிழர் மகாசபையின் கோரிக்கையை தமிழர் விடுதலைக் கூட்டணி தவிர்ந்த ஏனைய தமிழ்க் கட்சிகள் ஏற்றுக் கொண்டுள்ளன.

இதனையடுத்து தமிழர் (8 ஆம் பக்கம் பார்க்க

## வன்னி மாவட்டத் தேர்தலில் முன்னாள் எம்.பிக்கள் 8 பேர் போட்டி

(வவுனியா)

வன்னிமாவட்டத் தேர்தல் களத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் எட்டுப்பேர் குதித்துள்ளனர். இவர்களில் ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த திருமதி (8 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

யாழ்ப்பாணம் வணிகர் கழகப் பணிமனைக்கு (முந்திய ஈழநாடு கட்டடம்) ஓர் இரவுக் காவலாளியை நியமிப்பதற்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது. விண்ணப்பங்கள் 05.09.2000 புதன் கிழமைக்கு முன் யாழ். வணிகர் கழகம் இல. 27, நவீன சந்தை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும். [இ768]

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

செப்ரெம்பர் மாதம் 2-ஆம் திகதி வெளியிடப்பட்ட பட்டியலின் படி யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவுரீதியாகத் தரப்படுகின்றது.

**சங்கானை**

| | |
|---|---|
| 152130 ஏ | 152130 பி |
| 155479 ஏ | 155479 பி |
| 155479 சி | 155480 ஏ |
| 155480 பி | |

**யாழ்ப்பாணம்**

| | |
|---|---|
| 141084 ஏ | 141034 பி |

**கோப்பாய்**

| | |
|---|---|
| 134049 ஏ | 134049 பி |
| 149876 ஏ | 149876 பி |
| 150814 ஏ | 150814 பி |
| 150814 சி | 150814 டி |
| 150856 ஏ | 150856 பி |
| 150857 ஏ | 150857 பி |
| 150872 ஏ | 159872 பி |
| 150897 ஏ | 150897 பி |
| 152268 ஏ | 152287 ஏ |
| 152287 பி | 153145 ஏ |
| 153145 பி | 153145 சி |
| 153145 டி | 153146 ஏ |
| 153170 ஏ | 153170 பி |
| 153199 ஏ | 153199 பி |
| 153520 ஏ | 153520 பி |
| 153520 சி | 153520 டி |
| 154352 ஏ | 154484 ஏ |
| 154557 ஏ | 154557 பி |
| 157423 ஏ | 157423 பி |
| 159698 ஏ | 159698 பி |
| 159698 சி | 159698 டி |
| 159698 ஈ | 159823 ஏ |
| 159823 பி | |

**நல்லூர்**

| | |
|---|---|
| 156857 ஏ | 156857 பி |
| 156859 ஏ | 157208 ஏ |
| 157208 பி | 157244 ஏ |
| 157422 ஏ | 157422 பி |
| 157422 சி | 157422 டி |
| 157422 ஈ | 157459 ஏ |
| 157459 பி | 157500 ஏ |
| 157500 பி | 146374 ஏ |
| 152118 ஏ | 152118 பி |
| 152118 சி | 155167 ஏ |
| 155167 பி | |

**சண்டிலிப்பாய்**

| | |
|---|---|
| 155416 ஏ | 155416 பி |
| 157806 ஏ | 157806 பி |

**தெலிப்பழை**

| | |
|---|---|
| 121688 ஏ | 155148 ஏ |

**உடுவில்**

| | |
|---|---|
| 157192 ஏ | 157603 ஏ |
| 157603 பி | 157641 ஏ |
| 157641 பி | 158951 ஏ |
| 155096 ஏ | 155096 பி |
| 155407 ஏ | |

[சு]

### இடம் பெயர்ந்தோருக்கான

## இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு நாளை சண்டிலிப்பாயில்

(மானிப்பாய்)

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தங்கியிருக்கும் இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கான இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு நாளை 4ந் திகதி திங்கள் முதல் 7ந் திகதி வியாழக்கிழமை வரை சண்டிலிப்பாய்பிரதேச செயலகத்தில் 1மணி தொடக்கம் 5 மணி வரை மக்கள் வங்கியினால் வழங்கப்படும்.

இக் கொடுப்பனவைப் பெறும் கிராம அலுவலர்பிரிவு ரீதியான விபரம் பின்வருமாறு.

4ந் திகதி திங்கள்: ஜே/129-ஜே/132 வரையான சுதுமலை வடக்கு, சுதுமலை தெற்கு சாவற்கட்டு, உயரப்புலம்.

5ந் திகதி செவ்வாய்; ஜே/133 ஆனைக்கோட்டை.

6ந் திகதி புதன்: ஜே/137 140, 143- 146, 148 மானி.வடக்கு, மானி கிழக்கு மானி தெற்கு மானி மேற்கு, சண்டி மேற்கு, மாசியப்பிட்டி வடலியடைப்பு, பண்டத்தரிப்பு, சில்லாலை வடக்கு

7ந் திகதி வியழான்;- ஜே 150-155 மாதகல் கிழக்கு, மாதகல் தெற்கு மாதகல் மேற்கு, பெரிய விளான், மாரீசன் கூடல் இளவாலை

இக் கொடுப்பனவைப் பெறவருபவர்கள் தத்தமது பிரிவு கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு தமது பெயரை உறுதிப்படுத்துமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார். (சு-120)

## முன்னாள் பா. உறுப்பினர்கள் மட்டு. மாவட்ட தேர்தல் களத்தில்

மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீண்டும் தேர்தல் களத்தில் குதித்துள்ளனர்.

முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினரானஜோசப் பரராஜசிங்கம், பொன். செல்வராசா, முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினரான எம். எல். ஏ.எம் ஹிஸ்புல்லா பஸீர் ஷேகுதாவுத், ஐக்கிய தேசியக்கட்சி முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அஸீஸ் ஆகிர் மௌலானா. ஈ. பி. டி. பி நாடாளுமன்ற உறுப்பினர் அ. இராஜமாணிக்கம், பொதுஜன ஐக்கிய முன்னணி சோ. கணேசமூர்த்தி ஆகியோரே போட்டியிடுகின்றனர் (சு-60)

### யாழ்.மாவட்டத்தில்

## வாக்காளர்களை கவர்வதில் வேட்பாளர்கள் புதிய யுக்தி

[தென்மராட்சி]

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் வடமராட்சி, வலிகாமம், தீவுப்பகுதிகளில் இருக்கக்கூடிய தத்தமது ஆதரவாளர்கள் மற்றும் உறுப்பினர்களை தனித்தனியாகவும், குழுக்களாகவும் சந்தித்து தமது கொள்கைகள், நோக்கங்கள் பற்றி எடுத்துக் கூறுவதற்கான வியூகங்களையும் வழிமுறைகளைப் பற்றியும் இப்போது மிகவும் தீவிரமாக ஆலோசித்து வருவதாக அவ்வட்டாரங்களில் இருந்து அறியப்படுகின்றது.

சில அமைப்புகள் ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்கள்மாநாடுகளை நடத்தி தமது தேர்தல்நோக்கம், பார்வைகள், அப்பிராயங்களைத் தெரிவித்து விட்டன.

மீதமாக இருப்பவையும் அடுத்து வரும் ஒரிரு தினங்களில் செய்தியாளர்கள் மாநாடுகளை நடத்துவதற்கான முனைப்புகளில் ஈடுபட்டுவருகின்றன எனத் தெரியவருகின்றது.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட வரலாற்றில் இந்தத் தடவைதான் மிகக் கூடுதலான அமைப்புகள் தேர்தலில் போட்டியிடுகின்றன. அத்துடன் தேர்தல்களத்தில் ஒரே தடவையில் சுமார் 216வேட்பாளர் நிற்பதும் இதுதான் முதல் தடவைஎனக் கூறப்படுகின்றன.

மேலும் தேர்தல் பணிகள் தீவிரமடையும் பட்சத்தில் வெவ்வேறு விதமான ஈர்ப்பு முறைகள் வாக்காளர்கள் பக்கம் திருப்பிவிடப்படக்கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க, இந்த முறைத் தேர்தலில் மக்களுக்குச் சொற்பமேனும்அக்கறையில்லை எனும் அபிப்பிராயங்களை உருவாக்குபவர்களும் -வாக்காளர்களை உரிய முறைப்பிரகாரம் சிந்திக்கவிடாது அடிக்கடி வெவ்வேறு விதமான கருத்துருவாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றனர். என பொதுமக்கள் தரப்பில் கூறப்படுகின்றன.

எது எப்படியிருப்பினும்கூட இம்முறை யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் சுமார்60சதவீதமானவாக்காளர்கள் தமது வாக்குகளை தேர்தல் தினத்தன்று அளிப்பார்கள் என சமூகநோக்கர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (சு-77)

## உண்ணாவிரதம் கைவிடப்பட்டது

(திருமலை)

திருகோணமலை மாவட்டத்தில் அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளும் ஒரே சின்னத்தின்கீழ் போட்டியிட வேண்டுமெனக் கோரி கடந்த 01ந் திகதி முதல் உண்ணாவிரதமிருந்த எஸ்.யேசுதாஸன் என்ற இளைஞர் நேற்று பிற்பகல் 3 30மணியளவில் தனது உண்ணாவிரதப் போராட்டத்தைக் கைவிட்டார்.

இதேவேளை தமிழர் விடுதலைக் கூட்டணி.ஈ.பி.டி.பி ஆகிய கட்சிகள் தவிர்ந்த ஏனைய கட்சிகளும் சுயேச்சைக்குழுக்களும் ஒரேசின்னத்தின் கீழ் போட்டியிட சம்மதித்துள்ளன. (ந)

## இராஜகோபுரம் அமைப்பு

(கொக்குவில்)

தாவடி ஸ்ரீவடபத்திரகாளி அம்பாள் தேவஸ்தானத்தில் இராஜகோபுரம் அமைக்கும் பணி கடந்த தைமாதம் ஆரம்பிக்கப்பட்டுதொடர்ந்து இப்பணி இடம் பெற்று வருகிறது. (சு-114)

## இராசி பலன்

03-9-2000

(ஆவணி18 ஞாயிறு)

பஞ்சமி: மு.ப11.20 வரை

சுவாதி: பி.ப. 5.22 வரை

இராகுகாலம் 4.35-6.05

சுபநேரம் 9.05-10.35

சஷ்டி விரதம்

**மேடம்**
விருந்துபசாரம், பணவரவு, திருமண விடயம், சிறு வியாதி

**இடபம்**
மனதிற்கினிய நிகழ்வு, முயற்சி விருத்தி. காரிய வெற்றி

**மிதுனம்**
மனஸ்தாபம், வயிற்றுக் கோளாறு, முயற்சி பலிதம்

**கடகம்**
தாய்வழி உறவு குறை கேட்டல், பிரயாணம், தொழில் முயற்சி சாதகம்

**விருச்சிகம்**
பொருள் வரவு, குடும்ப சுகம், இடமாற்றம்

**தனுசு**
விதண்டாவாதம், காரியத் தடை, சுமாரான இலாபம், குடும்ப உறவு

**சிங்கம்**
உடல்நலசுகம், சுவாரஸ்யம், நன்மை விருத்தி

**கன்னி**
பணச் செலவு, சென்ற இடத்தில் கௌரவம், மனக் கிலேசம்

**துலாம்**
பணவரவு, கீர்த்தி, உல்லாசம், நினைத்த காரியம் கைகூடல்

**மகரம்**
தொழில்விருத்தி, மேன்மை, சிறு வியாதி, பிரயாணம்

**கும்பம்**
மனம் அமைதி பின்மை, மந்தம், காரியம் கைகூடும்

**மீனம்**
விபத்து, வாக்கு வாதம், காரியம் தாமதம்

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.)

வளவன்

## இருபத்துநான்காவது ஆண்டு நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 14 | 30 |
| 05 | 08 |
| 1914 | 1976 |

அமரர்

### திரு. ஆர். செல்லையா

(சன்லைற் றைக்கிளீனேர்ஸ் ஸ்தாபகர்)

தாங்குதல் தானேயன்றி தாங்குதல் யார்க்கும் வேண்டாமென
தாங்கியே வாழ்ந்தீர் தலைமுறைகள் யாவையும் தர்ம சீலரே!
தாங்கும் வேர்களாய் நாமிருந்தும் தனிமரமாய் தாங்கி நின்றெமை
தாங்கி தலை நிமிர வைத்தவரே! நின் ஆன்மா சாந்தியடைக என பிரார்த்திக்கும்

அன்பு மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

30/2, மருதடி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

[1682]

உ

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்



| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 06 | 04 |
| 04 | 08 |
| 1914 | 2000 |

### திருமதி பொன்னம்பலம் வள்ளியம்மை

அன்புடையீர்,

நிகழும் விக்கிரம வருடம் ஆவணி மாதம் 4-ம் நாள் (04-08-2000) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்த நயினாதீவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பொன்னம்பலம் வள்ளியம்மை அவர்களின் அந்தியேட்டிக்கிரியை 3-9-2000 (ஞாயிற்றுக்கிழமை) இன்று காலை 8 மணியளவில் நயினாதீவு தீர்த்தக்கரையில் நடைபெற்று பின்னர் அன்னாரின் இல்லத்தில் வீட்டுக் கிருத்தியமும் நடைபெறும்.

அத்தருணம் தாங்களும் குடும்பசமேதராக வருகை தந்து வைபவங்களில் பங்குபற்றி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கும் வண்ணம் பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்,

இங்ஙனம்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

5-ம் வட்டாரம்,
மானிகரை,
நயினாதீவு.

(1683)

# களுத்துறை மாவட்டத்தில் பிரதமா ரட்ணசிறி போட்டி

(கொழும்பு)

பொதுசன ஐக்கிய முன்னணி எதிர்வரும் பொதுத் தேர்தலில் கொழும்பு, கண்டி களுத்துறை மாவட்டங்களில் போட்டியிடுவதற்கான வேட்புமனுக்களை நேற்றுத் தாக்கல் செய்துள்ளன.

கொழும்பு மாவட்டத்தில் அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரமரத்தின தலைமையிலும், களுத்துறை மாவட்டத்தில் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தலைமையிலும்கண்டியில் பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலரும் அமைச்சருமான டி. எம் ஜெயரத்தின தலைமையிலும் நுவரெலியா மாவட்டத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செயலாளர் எஸ். பி திசநாயக்காவின்தலைமையிலும் போட்டியிடுவதற்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர். (வ)

### மானிப்பாய் மெமோறியல்

# பாடசாலையில் தங்கியுள்ளோரை வேறு இடத்திற்கு மாற்றவும்

## பிரதேச செயலருக்கு வேண்டுகோள்

(மானிப்பாய்)

மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப்பாடசாலையில் தங்கியிருக்கும் இடம்பெயர்ந்த மக்களை வேறுஇடத்தில் குடியமர்த்துமாறு கோரி பாடசாலை நிர்வாகம் சண்டிலிப்பாய் பிரதேசசெயலாளரைக் கடித மூலம் கேட்டுள்ளது

இவ்வேண்டுகோளில் இப்பாடசாலையில் 1200 மாணவர்கள்கல்விபயில்கின்றார்கள் நிரந்தர கட்டடம் மட்டும்தான் உள்ளது. இவற்றில் இரண்டு கட்டிடங்களில் இடம்பெயர்ந்தமக்கள் இருக்கின்றார்கள் ஒரு மண்டபத்தில் 36பிரிவுகளைக்கொண்ட மாணவர்களை வைத்து கல்வி போதிக்கின்றோம். மழைக்காலம் ஆரம்பமாகியுள்ளதால் மாணவர்கள் கல்வி கற்க இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது இவ்வாறு அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (க-120)

# மட்டு. ஏறாவூர் புகையிரத நிலைய அருகாமையில் குண்டு வெடிப்பு

## எம். பியின் வீட்டிற்கு அருகிலாம்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மாவட்ட ஏறாவூர் புகையிரத நிலைய ஊழியர் விடுதியின் மலசல கூடத்தருகில் புதைக்கப்பட்டிருந்த குண்டொன்று கடந்த வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் பாரிய சத்தத்துடன் வெடித்தது. இச்சம்பவத்தில் எவரிற்கும் பாதிப்பு ஏற்படவில்லை.

அலிஸாகிர் மௌலானா எம்.பியின் ஏறாவூர் வீட்டிற்கு சுமார் 50 மீற்றர் தொலைவில் இடம்பெற்ற இக்குண்டுவெடிப்பினால் அவரது வீட்டிற்கு சிறு சேதம் ஏற்பட்டுள்ளது.

எல்லைப் பாதுகாப்பில் ஈடுபடும் பொலிஸாரைக் குறிவைத்து இக் குண்டு புதைக்கப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

இது நேரம்கணித்து வெடிக்கும் குண்டு என பொலிஸார் தெரிவித்துள்ளனர். [சு-108]

# மட்டக்களப்பு மாவட்டத்தில் நான்கு கட்சிகள் வேட்புமனு தாக்கல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடுவதற்காக கடந்த வெள்ளிக்கிழமை நான்கு அரசியல் கட்சிகள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளன.

பொதுஜன ஐக்கிய முன்னணி, தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட், பிரஜைகள் முன்னணிஎன்பன கடந்த வெள்ளி வேட்பு மனுக்களை மாவட்ட தெரிவு அத்தாட்சி அதிகாரி இ. மோனகுருசாமியிடம் கையளித்தனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணி, முன்னாள் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் சோமசுந்தரம் கணேசமூர்த்தி தலைமையிலும், தமிழர் விடுதலைக் கூட்டணி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தலைமையிலும், புளொட் கணபதிப்பிள்ளை பாக்கியராஜா தலைமையிலும் பிரஜைகள் முன்னணி குமாரசிங்கம் வேலுப்பிள்ளை தலைமையிலும் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தன.

வெள்ளிக்கிழமை அரசியல் கட்சிகளின் ஆதரவாளர்களினால் கச்சேரி களைகட்டியிருந்தது. பெருந்தொகையான வாகனங்கள் சகிதம் மாவட்டத்தில் நாலா புறங்களில் இருந்து கட்சி ஆதரவாளர்கள் வருகை தந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (சு-60)

# கொழும்பில் ரணில் போட்டி

(கொழும்பு)

கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிடுவதற்கு எம்.எச்.எம். முகமட் தலைமையில் வேட்பு மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இப்பட்டியலில் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும் போட்டியிடுகிறார். [வ]

### பொதுத் தேர்தலின் பின்

# பொறுப்பேற்கும் புதிய அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு முடிவு கட்டும்

## நோர்வே தூதுவர் நம்பிக்கை

(கொழும்பு)

பொதுத்தேர்தலின் பின் பொறுப்பேற்கவிருக்கும் புதிய அரசினால் இனப்பிரச்சினைத் தீர்விற்கு நல்லதோர் முடிவு எட்ட இயலும் என நோர்வே நாட்டுத் தூதுவர் எரிக்சொல்ஹேம் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் பி.பி.சி.க்கு அளித்த பேட்டியொன்றில் அவர் மேற்படி கருத்தை தெரிவித்தார்.

தொடர்ந்து பி.பி.சிக்கு பேட்டியளிக்கையில், ஒக்டோபர் மாதம் நடைபெறவுள்ள பொதுத்தேர்தலின் பின்னர் புதிதாகப் பொறுப்பேற்கும் அரசு இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு பல நல்ல முன்னேற்றகரமான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லும் வாய்ப்புகள் இருப்பதாகவும் தெரிவித்தார்.

இலங்கை இனப்பிரச்சினையை தீர்த்துவைக்கும் வகையில் அரசு மற்றும் விடுதலைப்புலிகள் அமைப்புடன் பலகாலமாகவே நோர்வேத் தூதுவர் பேச்சுக்கள் நடத்தி வருபவர் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

### யாழ். மாவட்டத்தில்

# தேர்தல் ஏற்பாடுகளில் அரசியல் கட்சிகள் மும்முரம்

## சுவரொட்டிகளும் ஒட்டப்படுகின்றன

(ஈச்சமோட்டை)

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 10 ஆம் திகதி நடைபெறவுள்ள பாராளுமன்றப் பொதுத் தேர்தலை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் போட்டியிடும் அரசியல்கட்சிகள்மற்றும் சுயேட்சைக் குழுக்கள்தமது பிரச்சார நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளன.

இதன் முதல் அங்கமாக சில அரசியல் கட்சிகள் தமது சின்னங்கள் அடங்கிய சுவரொட்டிகளையும், துண்டுப் பிரசுரங்களையும் யாழ்நகரின் மூலை முடுக்கெல்லாம் ஒட்டியிருப்பதனைக் காணக்கூடியதாக உள்ளது.

இவை அனைத்தும் பொது மக்கள் கூடும் பொது இடங்களிலேயே அதிகளவில் காண முடிகின்றது எனினும் பொது இடங்களில் இவ்வாறான பிரசாரச் சின்னங்களை நாட்டக்கூடாதென தேர்தல் ஆணையாளர் அறிவிருத்திருந்தது குறிப்பிடத்தக்கது. (சு-59)

# கடற்றொழிலாளர்-இராணுவ அதிகாரிகள் யாழ்ப்பாணத்தில் சந்திப்பு

## டக்ளசும் உடன் இருந்தார்

(யாழ்ப்பாணம்)

ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் யாழ். கடற்றொழிலாளர் சங்கப்பிரதிநிதிகளுக்கும் 512 ஆவது பிரிகேட் இராணுவ உயர் அதிகாரிகளிற்கும் இடையில் பேச்சுவார்த்தை யாழ்ப்பாணத்தில் இடம் பெற்றது.

மேற்படி தலைமையகத்தில் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம்டக்ளஸ்தேவானந்தா மற்றும்கொட்டடி, நவாந்துறை, குருநகர், பாசையூர் கடற்றொழிலாளர் சங்கப் பிரதிநிதிகளும்இக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.

கொட்டடி, நாவாந்துறைப் பகுதியில் இடம் பெயர்ந்து வாழும் குருநகர், பாசையூர் கடற்றொழிலாளர்கள் மீண்டும் குருநகரில் கடற்றொழில் செய்ய அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் இச் சந்திப்பின் போது வலியுறுத்தப்பட்டது.

மண்டைதீவுக் கடலில் பாசையூர் கடற்றொழிலாளர்களால் கைவிடப்பட்ட வலைகளை மீண்டும் எடுத்துவருவதற்கும் கொள்கையளவில் அனுமதிவழங்கப்பட்டதாக ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதே வேளை பாசையூர் கடற்றொழிலாளர் நாவாந்துறைக் கடலில் தொழில் புரியவும் நாவாந்துறைக் கடற்றொழிலாளர் பாசையூரில் தொழில் செய்வதற்கும் இச் சந்திப்பின் போது இணக்கம் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் கொட்டடி, குருநகர், பாசையூர் சங்கங்கள் இணைந்து ஈ.பி. டி. பி.யின் அலுவலகத்தில் விசேட சந்திப்பு ஒன்றை ஏற்படுத்த இணக்கம் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது (க)

# மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் நேர்முகப் பரீட்டை இன்று

## யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர்

(யாழ்ப்பாணம்)

மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சை இன்று 10மணிக்கு தாதியர் பயிற்சிப்பாடசாலையில் நடைபெறவுள்ளது.

அவர்களின் பெயர்விபரம் பின்வருமாறு,

ஜே; மேகலா புத்தளை, புலோலிதெற்கு புலோலி

என். தமிழ்ச்செல்வி கந்த உடையார்லேன், புலோலி மேற்கு பருத்தித்துறை.

வி. வேல்விழி 906, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

எஸ். சுபத்திரா 345, பருத்தித்துறைவீதி, நல்லூர் யாழ்ப்பாணம்

எஸ். சுமந்திரா 342' பருத்தித்துறைவீதி நல்லூர் யாழ்ப்பாணம்

எஸ். எஸ் கஜந்தி 39, செட்டித்தெரு. நல்லூர், யாழ்ப்பாணம்

பி. செந்தாமரை மீசாலை கிழக்கு, மீசாலை

எஸ் கஸ்தூரி புத்தளை, புலோலிதெற்கு, புலோலி

ரி. தர்சினி செட்டிக்குறிச்சி, பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம்

என். மேகலா இடைக்குறிச்சி, வரணி

எஸ். வனர்மதி நீர்வேலி வடக்கு, நீர்வேலி

எஸ். செல்வகாந்தினி கந்தன் கல்வயல், இருபாலைகிழக்கு, கோப்பாய்

எஸ். ஞானசுந்தரி பாடசாலைலேன், தாவடிதெற்கு, கொக்குவில்

பி. உஷானந்தி 17, நாயன்மார்றோட், நல்லூர், யாழ்ப்பாணம்

ஜி சந்திரராகினி ஜிகான் திலகா ஸ்ரோஸ், நாவலடி உடுப்பிட்டி, யாழ்ப்பாணம் (க)

# கண்டெடுக்கப்பட்ட அ. அட்டைகள்

(யாழ்ப்பாணம்)

கீழே குறிப்பிடப்பட்டவர்களின் அடையாள அட்டைகள் கண்டெடுக்கப்பட்டு 'வலம்புரி' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளவும்.

கண்டெடுக்கப்பட்ட அடையாள அட்டைகளின் பெயர் விபரங்கள் வருமாறு:-

★ சிவலோகநாதன் சுதர்சினி (இத்தியடிப்பிள்ளையார் கோவில் வீதி, சங்கத்தானை)

★ நாகேஸ் மல்லிகாதேவி (பாரதிவீதி, கொண்டாவில்)

★ முத்தையா விஜயலக்சுமி (வெள்ளாந்தெரு. யாழ்ப்பாணம்)

★ மாணிக்கம் தர்மராஜா (சண்டிலிப்பாய்)

★ சிற்றம்பலம் சபாரத்தினம் (குடத்தனை வடக்கு)

★ இராஜரட்ணம் பாலச்சந்திரன் றெக்ளமேசன் பூங்கா வீதி, குருநகர்)

★ தர்மதாஸ் நொபலிரின் கலிஸ்ரர் (138/1 பாங்ஷால் வீதி, யாழ்ப்பாணம்)

★ சோமசுந்தரம் பாலச்சந்திரன் (பெருங்குளம் பிள்ளையார் கோவிலடி, சாவகச்சேரி)

★ சதாசிவம் கருணாகரன் (பொன்னம்பலம் வீதி, காரைநகர்)

★ சபாரத்தினம் சிற்றம்பலம் (கரையூர் குடத்தனை) (க)

# கட்சிகள் இணக்கம்

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவட்டத்தில் பொதுச் சின்னம் ஒன்றில் போட்டியிட பெரும்பாலான கட்சிகள் இணக்கம் தெரிவித்திருப்பதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஈ. பி. டி. பி, புளொட். ஈ. பி. ஆர். எல். எவ் வரதர் அணி உட்பட தமிழர் விடுதலைக் கூட்டணியையும் சேர்ந்த ஒவ்வொருவரிற்கும் வேட்பாளர் பட்டியலில் இடம் அளித்துள்ளதாக தமிழர் மகாசங்கம் தெரிவித்துள்ளது; (சு-60)

# கதிர்காமத்தில் பெரும் தேடுதல் ஐந்து தமிழ் இளைஞர்கள் கைது

## பாதுகாப்பு ஏற்பாடு காரணமாம்

[யாழ்ப்பாணம்]

எதிர்வரும் பொதுத் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பாதுகாப்பு கருதி கதிர்காமப் பகுதி சுற்றி வளைக்கப்பட்டு ஐந்து தமிழ் இளைஞர்களைப் சந்தேகத்தில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தேர்தல் காலங்களில் அமைச்சர்கள், எம்பிக்கள் மற்றும் கட்சித் தலைவர்கள் கதிர்காமத்திற்கு வழிபடச் செல்வது வழக்கமாக இருப்பதால் அவர்களின் பாதுகாப்புக் கருதியே இக் கைது இடம் பெற்றதாகத் தெரிய வருகிறது.

தேர்தல் நடவடிக்கைகளின் போது விடுதலைப் புலிகள் திடீர் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் காரணமாக திடீர் தேடுதல் நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது. (வ)

# கல்விப் பொதுத்தராதரப்பத்திர (சாதாரணதர) மாதிரிப் பரீட்சை - 2000

## சைவசமயம் மாதிரி வினாத்தாள் 1

## பகுதி I

ஆக்கம்: ஆ. சனக்குமரன்

கவனிக்க : (1) எல்லா வினாக்களுக்கும் விடை தருக
(2) விடைகளுள் சரியானது அல்லது மிகப் பொருத்தமானது என நீர் கருதும் ஒரு விடையைத் தெரிவு செய்க.
(3) நேரம் ஒரு மணித்தியாலம்

01] பூசையில் அறுகம்புல்லை விரும்பி ஏற்கும் தெய்வம்.
(1) விநாயகர் (2) சிவன் (3) பிரமா (4) விஷ்ணு

02] சிந்துவெளி நாகரிகம்:
(1) ஆரியருடைய நாகரிகத்தை ஒத்தது
(2) ஆரியருடைய நாகரிகத்திலும் சிறிது வேறுபட்டது
(3) ஆரியருடைய நாகரிகத்திலும் முற்றாக வேறுபட்டது
(4) ஆரிய நாகரிய அம்சங்களுடன் கலந்து உருவாக்கியது

03] சைவமக்கள் சுபகருமங்கள் ஆற்றுவதற்கு விலக்கப்பட்ட காலங்கள்;
(1) புண்ணிய காலங்கள் (2) உத்தரயாணகாலம்
(3) தைமாதம் (4) அட்டமிநவமி திதிகள்

04] பன்னிரு திருமுறைகளிலும் திருவாசகம் திருக்கோவை யார் இடம்பெறும் திருமுறை.
(1) மூன்றாம் திருமுறை (2) பத்தாம் திருமுறை
(3) ஒன்பதாம் திருமுறை (4) எட்டாம் திருமுறை

05] கலைமகளின் உற்சவகாலங்களில் பாடும் பாடல்களைப் பாடியவர்.
(1) குமரகுருபர் (2) அருணகிரிநாதர்
(3) அபிராமிப்பட்டர் (4) நக்கீரர்

06] கோயில் என்று சைவர்களால் சிறப்பித்துக் கூறப்படும் திருத்தலம்;
(1) சிதம்பரம் (2) திருக்கோணேஸ்வரம்
(3) நகுலேஸ்வரம் (4) சீர்காழி

07] இந்து சமய நூல்களுள் காலத்தால் மிகப்பழமை வாய்ந்தது.
(1) ஆகமம் (2) வேதம் (3) புராணம் (4) இதிகாசம்

08] சூரிய வழிபாட்டை கூறும் மந்திரம்.
(1) பஞ்சாட்சரம் (2) காயத்திரி
(3) அங்க மந்திரம் (4) இராம நாமம்

09] வேதசிரசு எனப் போற்றப்படுவது.
(1) பன்னிரு திருமுறைகளில் கடைந்தெடுக்கப்பட்ட வெண்ணெய்
(2) உபநிடதங்களிலிருந்து பெறப்பட்ட உண்மைகள் பிரவேசிக்கும்
(3) சித்தாந்தத்தின் உட்பொருள்கள் (4) கந்தபுராண நவநீதம்

10] குறிஞ்சி நிலக் கடவுள்.
(1) சிவன் (2) இந்திரன் (3) முருகன் (4) வருணன்

11] ''இடரினும் தளரினும்'' என்ற பதிகம் பாடி ஆயிரம் பொன்கள் அடங்கிய பொன் முடிச்சு பெற்றவர்.
(1) ஆறுமுக நாவலர் (2) மாணிக்க வாசகர்
(3) கபிலர் (4) சம்பந்தர்

12] ''எண்ணுகேன் என் சொல்லி எண்ணுகேனோ'' என்ற இறுதிப்பதிகத்தை படித்து சிவனடிசேர்ந்தவர்.
(1) சேக்கிழார் (2) மணிவாசகர் (3) அப்பர் (4) தாயுமானவர்

13] திருவெற்றியூரை விட்டு நீங்கியவுடன் கண்களை இழந்தவர்;
(1) சுந்தரர் (2) அருணகிரிநாதர்
(3) கண்ணப்பர் (4) வில்லிபுத்தூராழ்வார்

14] ''யாத்திரைப்பத்தை'' இறுதியாக ஓதி பேரின்ப நிலையை பெறுவதற்காக நின்றவர்.
(1) பட்டினத்தடிகள் (2) காரைக்காலம்மையார்
(3) மாணிக்கவாசகர் (4) சேரமான்பெருமான்

15] ''பிரத்திய பிஞ்ஞர் எனப்படும் சைவம் நிலவும் இடம்
(1) பஞ்சாப் (2) காஷ்மீரம் (3) வங்காளம் (4) தமிழ்நாடு

16] வளர்பிறை தேய்பிறையாகிய இரண்டு பட்சத்திலேயும் பதின் மூன்றாம் நாள் வரும் விரதம்:
(1) சிவராத்திரி விரதம் (2) பிரதோச விரதம்
(3) கால பைரவ அஷ்டமி விரதம் (4) சங்கட சதுர்த்தி விரதம்

17] ஆணவத்தின் வடிவம் எவ்வாறிருக்கும் என்ற கேள்வியை எழுப்பியவர்;
(1) உமாபதி சிவாச்சாரியார் (2) அருணந்தி சிவாச்சாரியார்
(3) மெய்கண்டதேவர் (4) மறைஞான சம்பந்தர்

18] சூரியன் தனுராசியிலிருந்து மகரராசிக்கு பிரவேசிக்கும் காலமாகிய உத்தராயண காலத்தில் கொண்டாடப் படுவது;
(1) மாசிமகம் (2) ஆடிப்பிறப்பு
(3) தைப்பொங்கல் (4) தீபாவளி

19] நவராத்திரி காலத்தில் மகாநவமி தினத்தில் போற்றப்படும் தெய்வம்.
(1) துர்க்கை (2) லக்ஷ்சுமி (3) சரஸ்வதி (4) மகாமாரி

20] பாலாவியின் கரையில் அமைந்துள்ள சிவஸ்தலம்:
(1) திருத்தம் பலேஸ்வரம் (2) திருக்கேதீஸ்வரம்
(3) முன்னேஸ்வரம் (4) திருக்கோணஸ்வரம்

(21) இறைவனது கிரியா சக்தியினால் ஒழிக்கப்படுவது.
(1) பிராரத்தகன்மம் (2) ஆணவமலம்
(3) சஞ்சிதகன்மம் (4) மாயை

(22) சைவசித்தாந்தக் கோட்பாடு மெய்யியல் ஆராய்ச்சிக்கு ஏற்றவாறு மெய்கண்டரால் வகுக்கப்பட்ட காலம்.
(1) புறநானூறு (2) சிலப்பதிகாரம்
(3) திருமுருகாற்றுப்படை (4) பரிபாடல்

(23) சூரபன்மன் யுத்தகளத்திலே சுப்பிரமணியருடைய திருப்பெரு வடிவத்தைக் கண்டான்.
(1) அறிவினால் (2) ஆணவத்தினால்
(3) மாயையினால் (4) தவத்தினால்

24) சத்திய ஞான தர்சினி என்ற தீட்சா நாமம் பெற்றவர்
(1) பரஞ்சோதி (2) மெய்கண்டார்
(3) அருணந்தி சிவாச்சாரியார் (4) உமாபதி சிவாச்சாரியர்

25) சைவசித்தாந்தப்படி இவ்வுலகம் உண்டாவதற்கு முதற்காரணம்
(1) சத்தி (2) இறைவன் (3) மாயை (4) கன்மம்

26) பணிந்து நடத்தல் இன்சொல் பேசுதல் என்பன
(1) ஒருவரின் ஆற்றாமையை
(2) ஒருவரின் பலவீனத்தின் அறிகுறிகளாகின்றன
(3) ஒருவர் வாழ்க்கையில் உயர்நிலை அடைவதற்கு ஏதுவாகின்றன
(4) ஒருவர் வாழ்க்கையில் ஏமாளியாக துணையாகின்றன;

# சமய நிகழ்ச்சிகள்

## வருடாந்த மஹோற்சவம்

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டாரப் புலம்அருள்மிகுதான்தோன்றி ஸ்ரீமனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் மஹோற்சவத்தில் 12ஆம் திகதி தேர்த் திருவிழாவும், 13ஆம் திகதி தீர்த்த திருவிழாவும் நடைபெறவுள்ளது. (சு-75)

★ ★ ★

[மானிப்பாய்]

நவாலி அருள்மிகு அத்திரான் முருகமூர்த்தி கோவிலின் வருடாந்த மஹோற்சவம் நாளை 4-ஆம் திகதி திங்கள் காலை 9;30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும் இம் மஹோற்சவத்தில் 12ம்திகதி இரதோற்சவமும், 13ம் திகதி தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (சு-120)

★ ★ ★

(சாவகச்சேரி)

வல்லை நெடியகாட்டு திருச்சிற்றம்பலம் பிள்ளையாராலய வருடாந்த மஹோற்சவம் நாளை 4-ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும் விழாக்களில் 9-ஆம் திகதி வேட்டைத் திருவிழாவும், 11-ஆம் திகதி சப்பரத்திருவிழாவும், 12-ஆம் திகதி இரதோற்சவமும் 13-ஆம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளது;

(சு-21)

## மணவாளக் கோலவிழா

(வண்ணார்பண்ணை)

காரைநகர் பயிரிக் கூடல் அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி ஆலய மணவாளக் கோல விழா இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறுகின்றது.

சகஸ்ர சங்காபிஷேகம், அபிஷேக ஆராதனைகள் என்பவற்றைத் தொடர்ந்து சுவாமி வீதி உலா வரும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது

(செ-109)

## நீதிபதி உத்தரவு

(வடமராட்சிகிழக்கு)

பொலிஸார் தேடிக்கொண்டு சென்றபோது கைக்குண்டு வைத்திருந்ததாகக் கூறி பருத்தித்துறை நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட சிவபாதம் சிவநாதன் என்பவரை அவசரகால விதிகளின் கீழ் 3 மாதங்களிற்கு விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி ஏ. ஈ. ஏகநாதன் உத்தரவிட்டார். (சு-43)

## வருடாந்த விளையாட்டு விழா

[யாழ்ப்பாணம்]

சங்கானை தொட்டிலடி சனசமூக நிலைய கண்ணன் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (சு)

## இன்று சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கந்தர்மடம் ஆத்திசூடி வீதி அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவ இறுதித்திருவிழாவை முன்னிட்டு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை சங்காபிஷேகமும், மாலை பஞ்சமுக அர்ச்சனை நடைபெற்று சுவாமி வீதியுலா வரும் நிகழ்வும்இடம்பெறவுள்ளது.

பகல் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படவுள்ளது. (செ)

## பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

(புலோலி)

பருத்தித்துறை தும்பளை அருள்மிகு நெல்லண்டை பத்திரகாளி அம்பாள் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெறுகின்றது.

பாலஸ்தாபன கும்பாபிஷேக கிரியைகள் பிரம்ம ஸ்ரீ சுவாமிநாத இராஜேந்திர சிவாச் சாரியார் தலைமையில் நடைபெறுமென ஆலய தரும பரிபாலன சபைச் செயலாளர் திரு.கே. புஸ்பராஜா தெரிவித்துள்ளார்.

(செ-52)

## அலங்கார உற்சவ பூர்த்தி

(ஊர்காவற்றுறை)

வேலணை சிற்பனைப்பதி அருள்மிகு முருகமூர்த்தி ஆலய வருடாந்த அலங்கார உற்சவப் பூர்த்தி நிகழ்வும், சங்காபிஷேகமும் எதிர் வரும் 5ஆம் திகதி செவ்வாய் அன்று காலை 10 மணிக்கு இடம் பெறவுள்ளது. (சு-75)

## விசேட சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு நடைபெறும் விசேட நிகழ்வுகளில் இன்று ஞாயிற்றுக்கிழமை, 'புராணஇதிகாசமுத்துக்கள்' என்னும் பொருளில் பிரம்ம ஸ்ரீ காரை கு. சிவராஜசர்மா சொற்பொழிவாற்றவுள்ளார்.

(செ)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மண்கும்பான் வெள்ளைப் புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மு.ப.11.00 மணிக்கு மேற்படி ஆலய மண்டபத்தில், தற்காலிக தலைவர் மு. சுவாமிநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது;

(செ)

## விளையாட்டுப் போட்டி

(மானிப்பாய்)

மானிப்பாய் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையுடன் யுவ சக்தி முன்பள்ளி பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா சுதுமலை தெற்கு அ. த. க. பாடசாலை மைதானத்தில் மானி.பனை தெ. வ. அ. கூ. சங்க தலைவர் அரியகுட்டி சின்னத்துரை தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதமவிருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் க. செல்வராசாவும், கௌரவ விருந்தினராக சுதுமலை தெற்கு அ. த. க. பாடசாலை அதிபர் ரி. கந்தசாமியும் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

(சு-120)

## இன்று ஒரு தகவல்

### ஆடம்பர அலங்காரங்கள் வாழ்விற்கு நிலையானவை அல்ல

ஒரு பெரிய திருமண விழா அவ்வூர் கோயிலில் நடைபெற்றது. அவ்வூரே களை கட்டி நின்றது. எங்கு பார்த்தாலும் காஞ்சிபுரங்களும், பட்டு அங்கவஸ்திரங்களும் ஜொலித்துக் கொண்டிருந்தன. ஏனெனில் அது செல்வச் செழிப்பு மிகுந்த திருமண வீடு.

பெரிய பெரிய பணக்காரர்கள் எல்லாம் அந்த திருமண விழாவில் கலந்து கொண்டனர்.

திருமண விழாவில் முக்கிய வைபவம் முடிந்ததும் அருகில் பெரிய செலவில் ஏற்பாடாகியிருந்த விருந்து மண்டபத்தினுள் எல்லோரும் நுழைந்தனர்.

வாயிலில் தம்பதிகளின் நெருங்கிய உறவினர்கள் நின்று அனைவரையும் வரவேற்றனர்.

அந்நேரம் அங்கு கிழிந்த உடையோடும், சீவப்படாத தலையோடும், சவரம் செய்யப்படாத முகத்துடனும் ஒரு அறிஞர் வாயிற்கு வந்தார். அவரைக் கண்டதும் வரவேற்பாளர்கள் முகத்தை சுளித்தனர். உள்ளே வாருங்கள் என்று கூப்பிடவில்லை. ''பின்னுக்கு உள்ள மாட்டுக் கொட்டிலில் இரு பிறகு சாப்பாடு தருகின்றோம்'' என்று கூறினார்கள். இவர் மன்றாடிப் பார்த்தார். அப்போதும் இவருக்கு அனுமதி இடைக்கவில்லை.

திரும்பி கடைக்குப் போய் கோட், சேட், ஜீன்ஸ் என்பவற்றை வாடகைக்கு எடுத்தார். தலையை அழகாகச் சீவி, முகத்தை சுத்தமாக்கினார். பிறகு திருமண வீட்டு விருந்துக்கு வந்தார். வாயில் வரவேற்பாளர்கள் இன்முகத்துடன் இன் சொல் கூறி உள்ளே அழைத்துச் சென்றனர்.

நல்ல சொகுசான கதிரையில் அமர்ந்ததும் அவருக்கு நல்ல உணவு வகைகள் வந்தன. அவர் உடனே அந்த உணவுகளை எடுத்து தனது கோட் இரு பொகசுற்களுக்குள் அடைந்தார். அங்கிருந்தவர்கள் எல்லோரும் அவருக்கு டைத்தியம் பிடித்து விட்டதோ என்று சந்தேகத்துடன் பார்த்தார்கள்.

அப்போது அவர் கூறினார். ''இந்த உணவு, மரியாதை வரவேற்புக்கள் எல்லாம் எனக்கு கிடைத்தது இல்லை. இந்த வெளி வேஷங்களான உடைக்கும், தோற்றத்திற்கும் கிடைத்தவை ஆகவே அதனை அவையே அனுபவிக்கட்டும்'' என்றார்.

உண்மை அதுதான். இந்த உலகின் கண் எத்தகைய பெரியோர்கள், புத்திஜீவிகள் எல்லோரும் வாழ்கின்றனர். ஆயினும் நாம் அவர்களின் தோற்றம் எளிமையாக இருப்பின் அவர்களை அறிவாளிகளாக கருதுவது குறைவு. எங்கள் மனங்களும் கல்வி அறிவைவிட பணத்தையும், பணத்தினால்வரும் புகழ், ஆடம்பரத்தையுமே மதிக்கவும், விரும்பவும் நினைக்கின்றோம் ஆயினும் நிலையற்றவைகளான இப்பொருட்கள் வாழ்வில் நிலைப்பதில்லை என்பதினை உணர வேண்டும்.

தென்கச்சி சுவாமிநாதன்

## சுய தொழில் முயற்சிக்காக வழங்கப்பட்ட கடனை மீளப்பெறமுடியாத நிலையில் அரச சார்பற்ற நிறுவனங்கள்

(தென்மராட்சி)

பச்சிலைப்பள்ளி, தென்மராட்சி பிரதேசங்கள் சுமுகமான நிலையில் இருந்த காலப்பகுதியில் அங்குள்ள கிராமங்கள் பலவற்றில் பொருளாதார நிலையில் நிலவுற்றிருந்தவர்களின் பெருளாதார நிலையை அபிவிருத்தி செய்ய உதவும் பொருட்டு சிலஅரசசார்பற்ற நிறுவனங்களினால் சுயதொழில் முயற்சிக்காக வழங்கப்பட்ட கடன் பணத்தை மீளவும் பெறமுடியாத நிலையில் அவை இன்று இருக்கின்றன எனத் தெரியவருகின்றது.

இந்தவகையில் அத்தகைய அரசசார்பற்ற நிறுவனங்கள் பலலட்சம் ரூபாய்களை இலகு வட்டிக்கு வழங்கியிருந்தன. விவசாயத்திட்டம், கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, சிறுவியாபாரம், கிடுகு பின்னல் பனைசார் உற்பத்திப் பொருட்கள் தயாரித்தல் போசாக்குஉணவு தயாரித்தல் கயிறு திரித்தல்போன்ற திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக நிதியுதவிகள் கடனாக வழங்கப்பட்டிருந்தன.

ஆயினும் எதிர்பாராமல் இடம்பெற்ற இடம்பெயர்வு காரணமாக குறித்த திட்டங்களின் பயணாளிகளால் கடனாகப் பெற்ற தொகையைப் பயன்படுத்த முடியாமல் போய்விட்டது.

இத்தகைய நிலையில் தம்மால் வழங்கப்பட்ட கடன் தொகையை எப்படிப் பெறுவது எனக் குறித்த அரசசார்பற்ற நிறுவனங்கள் திண்டாடி வருகின்றன. அதேவேளையில் சுயதொழில் திட்டங்களைச் செயல் படுத்தக் கூடிய யதார்த்த நிலை காணப்படவில்லை என பணம்பெற்ற பயாணளிகள் தரப்பில்கூறப்படுகின்றது.

இத்திட்டங்களுக்காக அந்த நிறுவனங்களால் 2 ஆயிரம் ரூபாவில் இருந்து 10 ஆயிரம் ரூபாவரை சுயதொழில் கடனாக வழங்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இத்திட்டத்தில் ஈடுபட்டிருந்த ஐந்துக்கு மேற்பட்ட அரசசார்பற்ற நிறுவனங்கள் சுமார் 50 லட்சம் ரூபாவரை இத்திட்டங்களுக்காக வழங்கி இருந்தன என அந்நிறுவனங்களின் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க தேசிய இளைஞர் சேவை மன்றம் போன்ற அரச நிறுவனங்கள் சிலவும் கிராமிய மட்டத்தில் அதன் உறுப்பினர்களுக்கு சுயதொழில் ஊக்குவிப்புத்திட்டத்துக்காக கடன் வழங்கியிருந்ததாகவும் யாழ். மாவட்டத்தில் தற்போது நிலவிவரும் அசாதாரண நிலையைக் கருத்தில்கொண்டு அவற்றின் பயனாளிகளும் தாம் பெற்ற கடனின்முதலையும் வட்டியையும் செலுத்தாமல் இருப்பதாக மன்றத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

வழங்கப்பட்ட கடனுக்குரிய மாதாந்தப் பணத்தையும் வட்டியையும் தொடர்ந்து செலுத்தாமல் இருப்பவர்களால் எதிர் காலத்தில் இத்தகைய சுயதொழில் உதவித் திட்டத்தினைச் வேறு பயனாளிகளுக்குச் செயல் படுத்த முடியாத நிலையே ஏற்படும் என நிறுவனங்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும். க-77

## அளவெட்டியில் இடம் பெற்ற கண்ணிவெடி விழிப்புணர்வுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கண்ணிவெடி விழிப்புணர்வு பற்றிய கூட்டம் ஒன்று அண்மையில் அளவெட்டியில் நடைபெற்றது.

அளவெட்டி ஜே-/ 220 பிரிவில் நடத்தப்பட்ட இக் கூட்டத்தில் பெருமளவு மக்கள் கலந்து கொண்டனர். இப்பகுதியில் மிதிவெடியில் சிக்குவோரின் எண்ணிக்கை அதிகரித்ததனாலேயே இக் கூட்டம் அளவெட்டிப் பகுதியில் நடத்தப்பட்டதாத் தெரியவருகிறது.

இளவாலை, முள்ளானை, விளான், மாரீசன் கூடல், போன்ற கிராம சேவகர் பிரிவுகளிலும் இக் கூட்டங்கள் நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாவும் மேலும் தெரிவிக்கப் படுகிறது.

(க-12)

## திருமணங்கள்...

(7 ஆம் பக்கத் தொடர்ச்சி)

✶ மீன இலக்கினத்திற்கு சப்தமாதிபதி புதன் மேஷம், ரிஷபம், சிம்மம், கன்னி, மகரம், கும்பம் ஆகிய ஸ்தானங்களில் இருந்தால், அது அரக்கர் மண்டலமாகும்.

இத்தகைய ஸ்தானமல்லாத மற்ற ஸ்தான அமைப்பு, சுபஸ்தான பலம்பெற்றதாகக் கருதப்படுகிறது. (சு)

## கிராம அலுவலர்களுக்கு உள்ளக இடமாற்றம்

(மானிப்பாய்)

வலி. தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் கடமையாற்றும் 8 கிராம அலுவர்கள் எதிர்வரும் 11 ந் திகதி முதல் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகனினால் உள்

பாலிஜே 137 மானிப்பாய் வடக்கிற்கும், ஜே150 மாதகல் கிழக்கு பே. இராசரத்தினம் ஜே/154 மாரீசன் கூட்டலுக்கும், எஸ். சுந்தரலிங்கம் ஜே/156 முள்ளானைக்கும், ஜே/152 மாதகல் மேற்குபெ.

## சைவசமயம் மாதிரி வினாத்தாள்

[4 ஆம் பக்கத் தொடர்ச்சி]

27) சைவத் திருமுறைகள் பன்னிரண்டிற்கும் இலக்கணம் போன்று பன்னிரண்டு சூத்திரங்களைக் கொண்டு விளக்கும் சாத்திர நூல்
(1) திருமந்திரம் (2) சிவஞானபோதம்
(3) சிவஞானசித்தியார் (4) திருவருட்பயன்

28) சைவர்களிற்கு வாழ்க்கையில் வழிகாட்டியாக விளங்குவன;
(1) நாலாயிரத் திவ்வியப் பிரபந்தங்கள்
(2) பஞ்சாரத்திர ஆகமங்கள்
(3) வைகாசன ஆகமங்கள்
(4) பன்னிரு திருமுறைகள்

29) திருவாலங்காட்டில் தனது திருக் கூத்தைக் கண்டு கொண்டு தன் திருவடி நிழலிலே இருக்குமாறு இறைவனால் பணிக்கப்படவர்
(1) திலகவதியார் (2) ...

பிரிவில் கடமையாற்றும்
கிராம அலுவர்கள் எதிர்வரும் 11 ந் திகதி முதல் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகனினால் உள்ளக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய ஜே/145 வடலியடைப்பு தி. நித்தியானந்தன் ஜே/148 சில்லாலை வடக்கிற்கும், ஜே/155 இளவாலை, சு.சுதர்சன் ஜே 145 வடலியடைப்பிற்கும், ஜே154 ஈரீசன் கூடல் வை. இ. தன

ஜே/...கும், எஸ். சுந்தரலிங்கம் ஜே/156 முள்ளானைக்கும், ஜே/152 மாதகல் மேற்கு பெ. உலகநாதன் ஜே/155 இளவாளைக்கும், ஜே/146 பண்டத்தரிப்பு இ.துரைராசா 150 மாதகல் கிழக்கு பதில் கடமையும் ஜே/149 ந. நாகராசா சில்லாலை தெற்கு ஜே/152 மாதகல் மேற்கு பதில் கடமையும் ஆற்றுவார்கள்.

(சு-120)


## ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகள் ப்ருந்தாவன ப்ரவேஷ விழா

ப்ரவேஷ விழா ஆவணி பூரண திதியை முன்னிட்டு 11-09-2000 தொடக்கம் 15-09-2000 வரைக்கும் நடைபெற உள்ளது. கிருஷ்ண ராகவேந்திர கானங்களையும் நிவேதன பொருட்களையும் அர்ப்பணிக்க விரும்புவோர்,

ராகவேந்திர மடாலய
நிர்வாகி,
159 A, கோவில் வீதி,
நல்லூரில்
தொடர்பு கொள்ளவும்.



மடாலய நிர்வாகி.

(கி-767)


29) திருவாலங்காட்டில் தனது திருக் கூத்தைக் கண்டு கொண்டு தன் திருவடி நிழலிலே இருக்குமாறு இறைவனால் பணிக்கப்பட்டவர்
(1) திலகவதியார் (2) மங்கையற்கரசியார்
(3) குலச்சிறையார் (4) காரைக்காலம்மையார்

30) பின்ன மிலான் எங்கள் பிரான் என்னும் இறுதியடியை உள்ள குறள் இடம் பெற்ற அதிகாரம்.
(1) அருளுரு நிலை (2) இருண்மல நிலை
(3) பதிமுது நிலை (4) ஐந்தெழுத்தருள் நிலை

31) நல்லூர் முருகன் ஆலயத்தில் முத்துக்குமாரசாமிக்கு விசேட அபிசேகம் நடைபெறும் தினம்
(1) ஆவணி அமாவாசை (2) வளர்பிறை சஷ்டி
(3) கார்த்திகை (4) சுக்கிரவாரம்

(32) உள்ளது இல்லாதாகாது இல்லது உள்ளதாகாது என்னும் கொள்கை
(1) ஏகான்மவாதம் (2) மாயவாதன்
(3) சற்காரியவாதம் (4) உலகாயுதம்

33) பயன்கருதிச் செய்யும் பூஜை
(1) ரத்தியபூஜை (2) காமிக பூஜை
(3) நைமித்திய பூஜை (4) யந்திர பூஜை

34) ஈசவத் தமிழ் மக்கள் வளர்த்த மெய்யியல்கலை
(1) வேதாந்தம் (2) சித்தாந்தம் (3) துவைதம் (4) ஏகான்மா

35) இந்து சமயத்தைக் குறிக்கும் வழமையான பெயர்
(1) சைவம் (2) சானாதனதர்மம்
(3) பாகவததர்மம் (4) பாரததர்மம்

36) பொறியின்றி ஒன்று புணராப்புத்தி எனக் குறிப்பிடப்படுகின்ற பொருள்
[1] ஆணவம் [2] கன்மம் [3] மாயை [4] உயிர்

37) அன்னை, தந்தை, ஆசிரியர் ஆகியோரை தெய்வமாகப் போற்றுக என்று கூறும் உபநிடதம்
(1) கேன உபநிடதம் (2) கட உபநிடதம்
(3) தைத்திரிய உபநிடதம் (4) ஐதரேய உபநிடதம்

38) தாரகன் யானையாக அதனை வாகனமாக ஏற்றுக் கொண்டவர்
[1] விநாயகர் [2] முருகன் [3] ஐயனார் [4] சிவன்

39) நல்லூர் முருகன் தேரடியில் அதிக காலத்தை செலவிட்டவர்
[1] கடையிற் சுவாமி [2] செல்லப்பா சுவாமி
[3] யோகர் சுவாமி [4] சிந்தனைக் குட்டி சுவாமிகள்

40) நாம் அன்றாடம் திருமுறை ஓத முன்பும் ஓதிய பின்னும் கட்டாயம் சொல்ல வேண்டியது
[1] அரகர நமப்பார்பதி பதே [2] தென்னாருடை சிவனே போற்றி
[3] திருச்சிற்றம்பலம் [4] இன்பமே சூழ்க

## உலக தரிசனம்

# ஐ. நா. சபைக் கூட்டத்தில் கியூபா கலந்து கொள்ளுமா?

## அவதானிகள் சந்தேகம்

(வாஷிங்டன்)

புத்தாயிரம் ஆண்டுக்கான ஐக்கிய நாடுகள்சபைபொதுக் கூட்டத்திற்கு கியூபா கலந்து கொள்ளுவது கேள்விக் குறியாக உள்ளதாக தெரியவருகிறது.

சுமார்150 உறுப்பு நாடுகள் கலந்து கொள்ள இருக்கும் ஐ:நா.பொதுக் கூட்டத்தில் ஆசிரிய ஐரோப்பிய நாடுகளின்மூக்கிய தலைவர்கள்பலர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் கியூபா தலைவர் பிடல் காஸ்ரோ கலந்து கொள்ள அழைப்பு இருந்தாலும் விசா கிடைக்குமா என்பது குறித்து பலத்த சந்தேகம் நிலவுகிறது.

இணைய வலைப்பின்னலைக் கொண்டு நாடுகளில் முன்னேற்றம் என்ற கோட்பாட்டில் அமைய இருக்கும் இக் கூட்டத்தில் லிபியா அதிபர் கடாபி ஈராக் அதிபர் சதாம் ஹூசைன் ஆகியோருக்கு அழைப்பு விடவில்லை என்பதும்இங்கு குறிப்பிடத்தக்கது. (உ)

# நேபாளத்தில் வாழும் அமெரிக்கரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் வருமா?

(டாக்கா)

நேபாளத்தில் இயங்கும் மாஓ தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதையடுத்து அங்குள்ள அமெரிக்கப் பிரஜைகளை அவதானமாக இருக்கும்படி அமெரிக்கா எச்சரித்துள்ளது.

மேற்படி போராளிகளால் அமெரிக்க பிரஜைகளுக்குகளும் அச்சுறுத்தல்கள் தற்போது இல்லையாயினும், அவர்களை மாலை வேளையில் வெளியில் செல்லவேண்டாம் என அமெரிக்கா கேட்டுள்ளது.

கடந்த 10 வருடங்களாக ஆட்சியில் இருக்கும் அரசை, கவிழ்க்கும் வகையில் தமது நடவடிக்கைகளை போராளிகள் அதிகரித்திருப்பதான அறிவிப்பினையடுத்தே அமெரிக்கா மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளது. (உ)

# 80 அடி கிணற்றில் வான் பாய்ந்தது 16 பேர் பலி 6 பேர் காயம்

## திருநெல்வேலியில் சம்பவம்

(சென்னை)

திருநெல்வேயில் சாலையில் சென்று கொண்டிருந்த வான் கிணற்றில் விழ்ந்ததில் 16 பேர் இறந்தனர்.

திருநெல்வேலியிலிருந்து சுமார் 40 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள தலவளி சமுத்திரம் என்னும் கிராமத்தில் வீதியில் இவ் விபத்து நிகழ்ந்தது.

விடுதுநர் தொழிற்சாலை ஒன்றிலிருந்து 3 வான்களில் சுற்றுலாவுக்கு தொழிலாளர்கள் சென்ற தென்றும் இந்த வான்களில் ஒன்று திருப்பத்தில் செல்லுகின்ற பொழுது வான் கட்டுப் பாட்டை இழந்ததால் 80 அடிக் கிணற்றுக்குள்ள வீழ்ந்ததில் 16 பேர் இறந்தனரென்றும், 6 பேர்கள் காயங்களுடன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனரென்றும் தெரிவிக்கப்படுகிறது.

இற்றைவரை 7 பேரின் உடல்கள் எடுக்கப்பட்டன. காயமடைந்தவர்களில் தொழிற்சாலை அதிபரின் மகனும் அடங்குவாரென்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

அமெரிக்கர்,

# விடுதலைக்கு ஒருகோடி டொலர் விலைபேசும் பிலிப் தீவிரவாதிகள்

(வாஷிங்டன்)

பிலிப்பைன்ஸ் தீவிரவாதிகள் தம் வசம் இருக்கும் அமெரிக்க பணயக்கைதிகளின் விடுதலைக்கு ஒருகோடி டொலர் விலைபேசியுள்ளனர்.

கடந்த 93 ஆம் ஆண்டு நியூயோர்க் நகர உலக வர்த்தக கேந்திர நிலையத்தில் இடம் பெற்ற குண்டுவெடிப்பு தொடர்பாக சந்தேகத்தின் பேரில் தமது சகாக்களை கைதுசெய்திருப்பதற்குஎதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் பிலிப்பைன்ஸ் தீவிரவாதிகள் அமெரிக்க பிரஜைகளைகடத்தியிருந்தனர்.

இதேசமயம், தமது கோரிக்கைகள் நிறைவேறாதவிடத்து தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அமெரிக்கப் பிரஜைகளில் ஒருவருக்கு சிரைச்சேதம் செய்து விடப் போவதாக முன்பு ஒருமுறை மேற்படி போராளிகள் குழு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ)

ஜப்பானில்

# எரிமலை வெடிக்கும் அபாயம் மக்கள் பாதுகாப்புத்தேடி ஓட்டம்

(ரொக்கியோ)

ஜப்பான் தீவு ஒன்றில் எரிமலைக் குமுறல் இடம்பெற்றுக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

இதனை அடுத்து கியூமா தீவுலுள்ள மக்களை உடன் வெளியேறும்படி அவ்வரசு உத்தரவிட்டிருக்கிறது.

ரோக்கியோவிலிருந்து 150 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள இத்தீவு வாசிகளை வெளியேறுமாறு அரசுபணித்துள்ளது.

இரண்டாயிரத்திற்கும்மேற்பட்டோர் வெளியேறியபோதிலும் இன்னும் சிலர் வெளியேறுவதில் தாமதம் காட்டுவதாக தெரிவிக்கப்படுகிறது.

14 வருடங்களாக உறக்க நிலையிலிருந்த இந்த எரிமலை கடந்த சில மாதங்களாக நீராவிப்புகைகளைக் அறிவிக்கப்படுகிறது. (து)

# இன்ரநெற் வெப்தள மூலம் பூசகர் இல்லாத விநாயகர் விழா

(புதுடில்லி)

பூசகரின் உதவியின்றி விநாயகர் சதுர்த்தியை இன்ரநெற்மூலமாகக்கொண்டாட ஏற்பாடாகியுள்ளது.

பக்தர்கள் 10 நாட்கள் தொடர்ந்து கொண்டாடும் இந்த விநாயகர் விழாவை தொடர்பு படுத்துவதற்காக இன்ரநெற் வலைப் பின்னல் (வெப்) தளம் அமைக்கப்பட்டுள்ளதாக இந்திய மென்பொருளாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வலைப் பின்னலூடாக நாட்டில் மாத்திரமல்ல உலகிலுள்ள அனைவரும் விநாயகர் விழாவை கண்டுகளிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தத் தளத்தில் பூசைகள் உட்பட விநாயகரைப்பற்றிய கதைகள் மற்றும் குழந்தைகளுக்கான விளையாட்டுக்கள் வழிபாடுகள் என்பன கண்டு களிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (து)

# ஆப்கானிஸ்தானில் குண்டு வெடிப்பு பாகிஸ்தானிய நிலையம் பலத்த சேதம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் பாரிய குண்டு வெடிப்பு சம்பவம் ஒன்று அண்மையில் இடம் பெற்றுள்ளது

ஆப்கானிஸ்தான் கிழக்குப் பகுதியிலுள்ள முக்கிய நகரத்தில் நேற்று முன்தினம் இக் குண்டு வெடித்தது.

பாகிஸ்தானின் ஆலோசனை சபைக் கட்டடத்தில் இக்குண்டு வெடிப்பு சம்பவம் இடம் பெற்றதென்றும் கட்டடத்திற்கு பாரிய சேதம் ஏற்பட்டதாகவும் உயிர் சேதங்கள் மற்றும் விபரங்கள் சரியாக அறிவிக்கப்படவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

மாநில முதல்வர்களுடன்

# கலந்து ஆலோசித்தபின்பே ஆளுநர்கள் நியமிக்கப்படுவர்

## -மாநிலங்களவையில் தீர்மானம்

(புதுடில்லி)

இந்திய மாநில முதல்வர்களுடன் கலந்தாலோசித்த பின்பே ஆளுநர்கள் நியமிக்கப்பட வேண்டும் என்ற தீர்மானம் மாநிலங்கள் அவையில் நிறைவேற்றப்பட்டது.

மாநிலங்களின் முதல்வர்கள் மற்றும் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டம் நேற்று முன்தினம் புதுடில்லியில் நடைபெற்ற போது மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாநிலங்களுக்குப் புதிய ஆளுநர்களை நியமிக்கும் விடயமாக நடைபெற்ற மாநிலங்கள் அவையின் கூட்டத்தில் தகுதியான குறிப்பாக அந்த மாநிலத்துக்குப் பொருத்தமான ஆளுநர்களை நியமிப்பதற்கு அந்த மாநிலத்தில் முதல் மந்திரியை மத்திய அரசு கலந்தாலோசிக்க வேண்டும் என்ற விடயத்தில் மத்திய அரசும் மாநிலங்களவையும் இணக்கம் கண்டுள்ளன.

புதுடில்லியில் நடைபெற்ற மாநிலங்களுக்கிடையேயான சபையின் 8 வது கூட்டத்தில் சர்க்காரிய கமிஷன் பரிந்துரைகளில் 63 அம்சங்கள் ஆராயப்பட்டன. ஏற்கனவே 177 அம்சங்கள் ஆராயப்பட்டன என்றும் தெரிவிக்கப்படுகிறது. (து)

கன்னட நடிகர் ராஜ்குமார்

# விடுதலையாகாவிட்டாலும் நலத்துடன் இருத்தல் அவசியம்

## ரசிகர்களின் தற்போதைய நிலைப்பாடு இதுவே

(புதுடில்லி)

கடந்த ஒரு மாத காலத்துக்கும் மேலாக சந்தனமரக் கடத்தல்வீரப்பனால் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் கன்னடத்திரை நட்சத்திரம் ராஜ்குமார் பூரண உடல் நலத்துடன் திரும்புவாராஎன்பதே தற்போது அவரின் ஆதரவாளர்களின் மனதில் எழுந்துள்ள பெரும் வினாவாக உள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ராஜ்குமாரை விடுவிக்கும் வகையில் பேச்சாளராக செயற்பட்டு வரும் பத்திரிகையாளர் கோபாலின் இரண்டு பயணங்கள் தோல்வியில் முடிவடைந்ததுடன் மூன்றாவது பயணத்திலும் வெற்றி கிடைக்குமா என்பது ஐயப்பாடாகவே உள்ளது.

ராஜ்குமார் விரைவில் விடுதலையாவார் என்ற நம்பிக்கை அற்றுப்போய்விட்ட நிலையில் அவரது உடல் நிலை பற்றிய சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

பல விதமான நோய்களுக்கும் ஆளாகிய நிலையில ராஜ்குமார் உட்கொண்டு வந்த மாத்திரைகளை கைதான காலத்தில் இருந்து பாவிப்பதை நிறுத்தியிருந்தமை ஏற்கனவேதெரிந்ததே.

பாதுகாப்புக் காரணங்களுக்காக விரப்பன் அடிக்கடி இடங்களை மாற்றுவதால் ராஜ்குமார் பலவித துன்பங்களுக்கு ஆளாகி வருவதாகவும், காடு, மலை, பள்ளம் என பாராது பல மைல் தூரம் நடந்து திரிவதாகவும் வெளியான செய்திகளே அவரின் ஆதரவாளர்களது கலக்கத்திற்கு காரணம் என நம்பப்படுகிறது.

இதே வேளை, ரசிகர்கள் பலர் அவரது பூரண நலன் வேண்டி பூசைகள், பிரார்த்தனைகளில் ஈடுபட்டு வருவதாகவும் தெரியவருகிறது. (உ)

# சிட்னி ஒலிம்பிக் கிராமம் நேற்று திறந்துவைப்பு

(கன்பரா)

இம்மாதம் 15 ஆம் திகதி சிட்னியில் ஆரம்பமாகவுள்ள ஒலிம்பிக்போட்டிகளையொட்டி அமைக்கப்பட்டுள்ள, 5 வது மிகப்பெரும் கிராமம் என வர்ணிக்கப்படும் சிட்னி ஒலிம்பிக் கிராமம் நேற்றுத் திறந்துவைக்கப்பட்டது.

அவுஸ்திரேலியாவின் முதுபெரும் விளையாட்டு வீராங்கனையும், 1928 ஆம் ஆண்டு அம்ஸ்ரடாம் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொண்டவர் எனும் பெருமைக்குரியவருமான 94 வயதுடைய எடிற்றைம்இந் நகரத்தினைத் திறந்து வைத்தார்.

ஒருமுறை சுற்றிவர சில மணிநேரம் செல்லும் இப்புதிய கிராமத்திற்குள் முதலில் இங்கிலாந்து வீரர்களும், அடுத்து கியூபா வீரர்களும் பிரவேசிப்பர் என ஒலிம்பிக் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் பங்குகொள்ளும் வீர வீராங்கனைகள் தவிர, 199 நாடுகளைச் சேர்ந்த 5 ஆயிரத்துக்கும் அதிகமான அதிகாரிகள் தங்குவதற்கேற்ற ஏற்பாடுகளும் இந் நகரத்தில் மேற்கொள்ளப் பட்டுள்ளன. (உ)

# அன்னதானமடம் அமைப்பு

(கொக்குவில்)

கொக்குவில் காவடி வேம்படிமுருகமூர்த்தி ஆலயத்திற்கென விஷேட அன்னதான மடம் பல இலட்சம் ரூபா செலவில்ஆலயதர்மகர்த்தாசபையின் திருப்பணிச் சபையினரால் அமைக்கப் பட்டுவருகின்றது. (சு-114)

குடிபுறங் காத்தோம்பிக்
குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்

- குறள் -

# வலம்புரி

## சிதறுண்டு போனோம்.

தீராதபல் குழல் பீரங்கிச் ஷெல் சத்தம்காதைப் பிளக்க, இதயத்தைப் பிழியும் பீதியுடன் மக்கள் வெள்ளம் மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம்பிசாசுஎன்பதுபோல போர்ப்பீதியால்போரடித்துப் போயிருக்கிறார்கள். கெற் செற் றெடி என்ற நிலையில் இடம் பெயர இருப்பவர்களும், இடப்பெயர்ந்து கொண்டிருப்பவர்களும் பார்க்க பரிதாபமாக இருக்கும். அன்றியும் அவல நிலையைத் தூண்டுவதாகவும் இருக்கும். இது இந்த மண்ணில் நீங்கா நிலை.

ஏங்கும் இதயங்களுக்கு என்று தான் நிம்மதிபிறக்கப் போகிறதோ தெரியாது. இந்த அவல நிலையில் ஒரு விழா, தேர்தல் விழா. அதுவும் சிதறுண்டு பல பிரிவுகள் மலிந்த நீண்ட பட்டியல். அடிப்படைநோக்கம் ஒன்றாகி, அணுகுமுறைகள் பலவாகிய நிலையில் இவ்வேறுபாடுகள். இவைகள் ஒன்றாகி நின்றால் நன்றாகத் தான் இருக்கும். அரசியல் வேதாந்திகள் எப்படி ஒன்றாவது என்று டமாரம் அடிக்கும்காலமும் இதுவே தான்.

சிதறுண்டு போன மக்கள், சிதையுண்டு போனதும், சிதையிலே நாளாந்தம் சாம்பலாவதும்சாபக்கேடுதான். பட்டினிச்சாவு மக்களை வாட்டும். உழைக்கும்கரங்கள்இறுகப்பிணிக்கப்பட்டிருக்கும். உண்டியும், உறையுளும் இல்லாது தவிப்பவர்மலிந்திருக்கும் இது தான் நாம்வாழு மண்ணின் இலட்சணம்.

இத்தகை சோக நிலை வாழ்விடத்திற்கு இம்மியும் உதவாது. மேற்குலக நாடுகள் காணுகின்ற சுக போகங்கள் எத்தனை அவை இந்த மண்ணுக்குக் கிட்டுவதில்லை. அத்தகைய சுக போகங்கள் தேவையில்லை. அடிப்படைத்தேவைகள் மட்டும் கிடைத்தால் போதும் என்றே மக்கள் திருப்திப் படுகிறார்கள். அவை அவர்கள் காணும் சொர்க்கம் என்றே கூறலாம்.

தேர்தல் காலங்களில் மலரும் தேன் போன்ற கருத்துக்கள்நிச்சயப்படுத்தப்பட்டு நாட்டிலே பிரயோகப்படின் மக்கள் அபிலாசைகள் பெருமளவு கிடைத்து விடும்.

நினைத்தால் கண்ணீர் வரும் ஆனால் அது தான் இடப்பெயர்வால் தீர்ந்து போய் விட்டது. இதயம் ஒன்றே இரத்தக்கண்ணீர் வடிக்கிறது. காரணம் நாமின்னும் உயிருடன் இருப்பதால்.

-அன்புடன் ஆசிரியர்

# திருமணங்கள் பலவிதம்; ஒவ்வொன்றும் ஒருவிதம்

# பொருத்தம் பார்ப்பது என்பது அவசியம்தானா?

**கடந்த மாதம் 27 ஆம் திகதி ஞாயிறு அன்று பிரசுரிக்கப்பட்ட சோதிடபலனின்தொடர்ச்சி கீழே தரப்படுகின்றது.**

ஜெனன லக்கினத்திற்கு 12 ஆம் இல்லம் அயன சயன யோகஸ்தானமாகும். இந்த இடம் காலியாக இருக்கும் பெண் ஜாதகிக்கு, அங்காரகனும், சனியும், வேறு எதாவது இல்லங்களில் கூடியோ அல்லது தனித்தனியாகவோ, இருந்து, இந்த 12 ஆம் இல்லத்தை அவ்விருவரும் பார்த்தால், அவளுக்குத் திருமணமானவுடன், கணவன்மனைவி உறவில் வெறுப்பும் கசப்பும் ஏற்பட்டு, அது முதல் கணவன் மனைவி உறவில் இணக்கம் இல்லாமலேயே போய் விடும். இந்த 12 ஆம் இல்லத்திற்குச் சுபர்பார்வையும் ஏற்படின் மேற்சொன்ன அசுபப்பலன்கள் அடிபட்டுப் போய்விடும்.

ஆண் ஜாதகத்தில், ஜெனனலக்கினத்திற்கு4ல் சனியோ அல்லது மூன்றில் சுக்கிரனோ இருந்தால் அந்த ஜாதகர், உறவு விஷயத்தில் சபலம் உள்ளவராக இருப்பார் என்று சொல்லப்படுகிறது.

மர்மஸ்தானத்தைக் குறிக்கும் எட்டாமிடத்தில் சுக்கிரனை அமையப் பெற்ற ஜாதகர்-பெண் வியாதியால் பீடிக்கப்படக்கூடும் என்பதால், இவர்கள் இந்த விஷயத்தில், அதிக அளவுஎச்சரிக்கையுடன் இருப்பது அவசியமாகும் இது இப்படிஎன்றால், பணப்புழக்கம் மட்டும் இறுதி வரையில் வற்றாதவளம்தரக்கூடியதாக இருக்கும்.

### செவ்வாய் தோஷசம்

ஆண் அல்லது பெண் ஜாதகத்தில்ஜெனனலக்கினத்திற்கு 2-4-7-8-12 ஆம் இல்லங்களில் செவ்வாய் என்று சொல்லக் கூடிய அங்காரகன் இடம் பெற்றுஇருந்தால், அது ''செவ்வாய் தோஷம்'' என்றும், அங்

## ( சோதிடபலன் )

காரகதோஷம் என்றும்சொல்லப்படுகிறது ஆணுக்கு இப்படிப்பட்ட தோஷம் இருந்தால், பெண்ணுக்கும்இப் படிப்பட்ட தோஷம் இருக்க வேண்டும்.

மொத்தத்தில், பெண்ணுக்கும் பிள்ளைக்கும் ஆக இருவருக்கும் ''செவ்வாய் தோஷம்'' இருக்க வேண்டும் அல்லது, இருவருக்கும் இந்த தோஷம் இல்லாமல் இருக்க வேண்டும். ஒருவருக்கு தோஷம்இருந்து, மற்றவருக்கு தோஷம் இல்லை என்றால், அந்த திருமணத்தைச் செய்யக்கூடாது. தோஷமுள்ள ஜாதகம் தோஷமில்லாத ஜாதகத்தை அடித்துவிடும்.

திருமண விஷயத்தில் பெரும்பாலானோர் ''நாடிப் பொருத்தம்'' என்ற பொருத்தத்தைக் கவனிப்பதேயில்லை. அது மிகவும் முக்கியம் என்பதை மறந்து விடக்கூடாது. பெண்ணுக்கும் பிள்ளைக்கும் வெவ்வேறு நாடியாக இருந்தால் தான் இவ்விருவருக்கும் திருமணம் செய்யலாம். இல்லாவிட்டால், அதுபொருந்தாது இப்படி நாடிப்பொருத்தம் இல்லாத சதிபதிகளுக்குத் திருமணம் செய்து வைப்பது கூடாது.

ஜெனன லக்கினத்திற்கு 10 ஆம் இல்லத்தில் குருதேவரை அமையப்பெற்ற பெண் ஜாதகரை மணந்து கொள்பவர், தமது வாழ்நாளில் அடிக்கடி பிரிவினை, பிரச்சினை, வறுமையின் வாட்டம் போன்ற இடர்ப்பாடுகளை அனுபவிக்கக் கூடும் என்பது அனுபவத்தில் சாத்தியமாகும். இதனால் தான், ''பத்தாமிட குரு பதியைக் குலைக்கும்'' என்பர்.

பெண் பிள்ளைக்கும், தசவிதத் திருமணப்பொருத்தம், செவ்வாய் தோஷப் பொருத்தம், நாடிப் பொருத்தம் மட்டும் பார்த்து விட்டால் போதாது. ''விவாகச்சக்கரம்'' என்ற மைப்பின்மூலம் நல்லதொரு சுப முகூர்த்தத்தையும் தேர்ந்தெடுக்க வேண்டும். அதுவும் சரியாக அமைந்து விட்டாலும். கூடபோதாது.

### மண்டலம்

ஆண், பெண் ஆகிய இருவருடைய ஜெனன லக்கினத்திற்கு ஏழாம் இல்லத்ததிபதிகள் அதாவது களத்திர ஸ்தானாதிபதிகள், அரக்கர் மண்டலம் அல்லாமல், தேவர் மண்டலம் அல்லது நரர் மண்டலம் பெற்று இருக்க வேண்டும். இருவரில் ஒருவருக்காவது இந்த சுபமண்டல அமைப்பில், சப்தமாதிபதி (களத்திர ஸ்தான திபதி) இடம்பெற்று இருக்க வேண்டும். அப்போதுதான் அந்த சதிபதிகளின் வாழ்க்கை சோபிதமாக இருக்கும். அப்படியின்றி இருவருக்கும் சப்த

**(ஏ. எம். பிள்ளை)**

மாதிபதிகள் அரக்கர் மண்டலம் ஏறியிருந்தால், அது வளமான வாழ்க்கையாக அமையாது. தடம்புரண்டு குப்புறக் கவிழ்ந்தது போல இருக்கும்

### மண்டல விபரம்

★ மேஷ லக்கினத்திற்குச் சப்தமாதிபதி சுக்கிரன், மிதுனம், தனுசு, மகரம் ஆகிய ஸ்தானங்களில் இருந்தால், அது அரக்கர் மண்டலமாகும்.

★ ரிஷப லக்கினத்திற்கு சப்தமாதிபதி அங்காரகன், மேஷம், கன்னி, விருச்சிகம், தனுசு, மகரம் ஆகிய ஸ்தானங்களில் இருந்தால், அது அரக்கர் மண்டலாகும்.

★ மிதுன லக்கினத்திற்கு சப்தமாதிபதி குரு ரிஷபம், மிதுனம், சிம்மம், விருச்சிகம், மகரம், மீனம் ஆகிய ஸ்தானங்களில் இருந்தால் அது அரக்கர் மண்டலமாகும்.

★ கடக லக்கினத்திற்கு சப்தமாதிபதி சனி, துலாம், தனுசு, மீனம் ஆகிய ஸ்தானங்களிலிருந்தால், அது அரக்கர் மண்டலமாகும்.

★ சிம்ம லக்கினத்திற்கு சப்தமாதிபதி சனி மேஷம், ரிஷபம், கன்னி, மகரம் ஆகிய ஸ்தானங்களில் இருந்தால், அது அரக்கர் மண்டலமாகும்.

★ கன்னியா லக்கினத்திற்கு சப்தமாதிபதி குரு, சிம்மம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம் ஆகிய ஸ்தானங்களில் இருந்தால், அது அரக்கர் மண்டலமாகும்.

★ துலா லக்கினத்திற்கு சப்தமாதிபதி அங்காரகன், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி விருச்சிகம் ஆகிய ஸ்தானங்களில் இருந்தால், அது அரக்கர் மண்டலமாகும்.

★ விருச்சிக லக்கினத்திற்கு சப்தமாதிபதி சுக்கிரன் மிதுனம், கடகம், தனுசு, மகரம் ஆகிய ஸ்தானங்களில் இருந்தால், அது அரக்கர் மண்டலமாகும்.

★ தனுசு லக்கினத்திற்கு சப்தமாதிபதி புதன், மேஷம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், தனுசு, மகரம், மீனம் ஆகிய ஸ்தானங்களில் இருந்தால், அது அரக்கர் மண்டலமாகும்.

★ மகர லக்கினத்திற்கு சப்தமாதிபதி சந்திரன் ரிஷபம், கடகம், கன்னி, துலாம், மகரம், மீனம் ஆகிய ஸ்தானங்களில் இருந்தால், அது அரக்கர் மண்டலமாகும்.

★ கும்ப லக்கினத்திற்கு சப்தமாதிபதி சூரியன், சிம்மம், துலாம், மகரம் ஆகிய ஸ்தானங்களில் இருந்தால் அது அரக்கர் மண்டலமாகும்.

[ 5ஆம் பக்கம் பார்க்க]

**பரமபிதா காட்டிய பாதை**

நம் வாழ்வில்

# நடக்கும் ஒவ்வொரு நிகழ்வும்

# இயற்கையில் ஏற்பட்ட மாறுதலே

'பழைய ஏற்பாட்டிலே இஸ்ராயேல் மக்கள் தலைவிதியில் நம்பிக்கை வைத்தவர்களல்ல' தம் வாழ்வில் நடந்த ஒவ்வொரு நிகழ்ச்சியையும், இயற்கையில் ஏற்பட்ட ஒவ்வொரு மாறுதலையும் இறைவனின் திட்டப்படியே நடக்கின்றது என்ற ஆழ்ந்த நம்பிக்கையில் வாழ்ந்தவர்கள். இறைவன் தங்களோடு பேசுகின்றார், நடக்கின்றார், போரிடுகின்றார் என்னும் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டவர்கள், எனினும் சில சந்தர்ப்பங்களில் இறைவனின் வழிநடத்தலுக்குச் செவிசாய்க்காது, சுயவிருப்பப்படியே நடந்து அகந்தை கொண்டவர்களாய் இருந்தார்கள்.

அவ்வாறே புதிய ஏற்பாட்டிலும் பரிசேயரும், மறைநூல் அறிஞர்களும் சட்டங்களை நுணுக்கமாக அறிந்திருந்தனர். ஒய்வுநாள், மூதாதையர் மரபு இவற்றைக் கடைப்பிடிப்பதில் ஆர்வம் காட்டினர். ஏன் யூதர்கள் அனைவருமே தம மூதாதையர் மரபைப் பின்பற்றிக்கைகளை முறைப்படி கழுவாமல் உண்பதில்லை. அவ்வாறே கிண்ணங்கள் பரணிகள், செம்புகள், ஆகியவற்றைக் கழுவுதல் போன்று அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய மரபுகள் இன்னும் பல இருந்தன.

இப்படிப்பட்ட வெளிவேடக்காரர்களைப்பற்றியே இறைவாக்கினர் ஏசாயா பொருத்தமாக இறைவாக்கு உரைத்திருக்கின்றார். 'இம்மக்கள் உதட்டினால் என்னைப் போற்றுகின்றனர் இவர்கள் உள்ளமோ என்னை விட்டு வெகு தொலைவில் இருக்கிறது'.

இன்றைய எம்முடைய ஆன்மீக வாழ்வு எப்படி இருக்கின்றது என்பதைச் சிந்திக்க வேண்டிய அவசியம் உள்ளது. எமது வாழ்வும் வழிபாடும் வேறு, சொல்லும் செயலும் வேறு. எண்ணமும் சிந்தனையும் வேறாக உள்ளது. 'உருவத்தைப் பார்ப்பவன் மனிதன் அதில் உள்ளத்தை காண்பவன் இறைவன்' என்ற சினிமாக் கவிஞனின் வரிகள் 'உள்ளம்' எப்படிப்பட்டது என்பதை எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. 'வெளியேயிருந்து மனி



தருக்குள்ளே சென்று அவர்களைத் திட்டுப்படுத்தக் கூடியது ஒன்றுமில்லை: மனிதனுக்கு உள்ளேயிருந்து வெளியே வருபவையே அவர்களைத் திட்டுப்படுத்தும்'. (மாற். 7:15)

மதுபானச்சாலைதொலைக்காட்சி-வானொலி பாலியல் புத்தகங்கள், படங்கள் தனிமையைத் தட்டிக் கழிக்க மனிதன் தேடிய இடைவெளி நிரப்பல்கள் ஏராளம்; வேலைத்தளம், விருந்துகள், ஒன்றுகூடல், இசைக்கச்சேரிகள், நாடகங்கள் இவைகளும் எம் தனிமையை நீக்குவதாயில்லை. ஒன்று மாறிஒன்றாக ஒரே அலைச்சல் இவை எல்லாம் எம் ஆன்மாவிற்கு விடுதலை தருமா?

'யுத்தம்' என்ற திரையினுள்ளே சமூக வாழ்வு தரமிழந்து போகின்றது! சமூக உறவுகள் மேலோட்டமானதாயும் பொருளியல் நோக்குடையதாயும். எதிர்பார்ப்புக்கள், பிரதி பலன்கள், கை மாறு போன்றவற்றை மையமாக வைத்தவையாயும் மாறிவருகின்றன. மக்களிடையே அந்நியப்படுத்தப்பட்ட உணர்வு அதிகரித்து வருகின்றது. ஆயினும் 'உயிரைக் கொல்ல வேண்டியவர்களுக்கு அஞ்சவேண்டாம். உயிரையும் ஆன்மாவையும் நரகத்தில் வீழ்த்தக் கூடியவர்களுக்கே அஞ்சுங்கள் என இயேசு குறிப்பிடுகின்றார்.

**சவேரியான் ஸ்பெல்மன் அல்மெயின்**

எமது ஆன்ம பிறழ்வுகளை தூயபவுல் நிரல்படுத்திக் காட்டுகின்றார். பரத்தமை, கெட்டநடத்தை, காமவெறி சிலைவழிபாடு, பில்லி சூனியம், பகைமை, சண்டை சச்சரவு, பொறாமை, சீற்றம், கட்சி மனப்பான்மை, பிரிவினை, பிளவு அழுக்காறு, குடிவெறி, களியாட்டம், (கலா 5:19-21) இவற்றிலிருந்து விடுதலையடைகின்ற போதே நாம் விரும்புகின்ற ஆன்மீக விடுதலை பெறமுடியும்; ஆன்மீகம் விடுதலையடைகின்ற போது நாம் தேடும் உலக விடுதலை கைகூடும்;

யாழ்ப்பாணம் நூலகத்துறைப் படிப்பகம்

# அமைச்சர் ஜயரத்தினா விபத்தில் படுகாயம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளரும், அமைச்சருமான டி. எம். ஜயரத்தினா சென்ற வாகனம் விபத்துக்குள்ளானதில் அமைச்சரும் அவரது பாரியாரும், இரு பொலிஸாரும் படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவம்பற்றி தெரியவருவதாவது; கண்டியில் வேட்புமனுத் தாக்கல் செய்துவிட்டுத் திரும்புவருகையில் கேகாலையில் இரவு 11 - 40 மணியளவில் இவ்விபத்து நடைபெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த அமைச்சரும், அவரது பாரியாரும் நேற்றுக்காலை கொழும்பு தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அமைச்சருடன் வந்திருந்த பொலிஸாரும், சாரதியும் கேகாலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (வ)

## இலங்கைத்...

மாதம் 21ஆம் திகதியிலிருந்து மாவைசேனாதிராஜா தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளராக நியமிக்கப்பட்டு தற்போதும் தொடர்ச்சியாக அவரே செயலாளராக இருந்து வருகிறார் எனவே அவ்வேட்பு மனுவில் சேனாதிராஜாவின் ஒப்பம் காணப்படாமையினால் அவ்வேட்பு மனு நிராகரிக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)


ஸ்ரீ செல்வா
[யாழ்ப்பாணம்]
சத்தியராஜ், குஷ்பு நடித்த
உன்னைக் கண் தேடுதே
CD புதிய பிரதி
காட்சி நேரம்
10-30, 2-00 (ப.நே)
[இ 688]


## வாக்குப்...

பட்டிருப்புத் தொகுதியில் சின்னவத்தை எனும் இடத்துக்கும் மட்டக்களப்பில் மங்களகம ஆகிய இடங்களுக்கும் மோட்டார் வாகனம் மூலம் வாக்குப் பெட்டிகளை எடுத்துச் செல்ல முடியாதுள்ளதனால் ஹெலிகொப்டர் மூலம் வாக்குப்பெட்டிகளை கொண்டுசெல்ல ஏற்பாடாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் 315 தேர்தல் நிலையங்களும் 180 கொத்தணி நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புத்தூர்...

பல்குழல் எறிகணைத் தாக்குதல்களும் ஹெலிகொப்டர்கள் துப்பாக்கி வேட்டுகளை தீர்த்து வருவதனாலும் மக்கள் பெரும் பதற்றமும் பீதியும் கலந்த துன்பவாழ்க்கையை அனுபவித்து வருகின்றனர்.

நேற்று அதிகாலை முதல் முழுநாளும் 'ஷெல்' தாக்குதல்களும் ஹெலித்தாக்குதல் அடிக்கடி இடம் பெற்ற வண்ணமிருந்தது எனினும் இதனால் ஏற்பட்ட சேதவிபரங்கள் எதுவும் இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை கிடைக்கவில்லை. (வ)


நாகம்ஸ்
(சுன்னாகம்)
அஜித்-ஷாலினி
இணையும்
அமர்க்களம்
(ரீல்ஸ்)
காட்சிகள் .11.00 . 2.30
(பு.நே)


### தவறிவிட்டது

இல-26 நாவலடிலேன் வண்ணார்பண்ணை யாழ்ப்பாணம் எனும் முகவரியைச் சேர்ந்த மூத்துத்தம்பி கேதீசன் என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் விசேட அடையாள அட்டையும் தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்படி முகவரியில் அல்லது 'வலம்புரி' காரியாலயத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும்.

T.P:- 2845

(1684)


கஜன்
திரை
ஊர்காவற்றுறை
கார்த்திக், ரேவதி
ஜனகராஜ், குஷ்பு
நடிப்பில்
கிழக்கு வாசல்
காட்சி நேரம்
பி.ப 8.30 மணி
(இ-652)


# புலிகள்தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

கடந்த 29 ஆம் திகதி மன்னார் உயிலங்குளம் பகுதியில் இராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான நேரடி மோதலின் போது

★ லெப்: பரணிதன் தியாகராஜா சிறீதரன் (முல்லைத்தீவு)

என்ற போராளியும் நேற்று முன்தினம் தென்மராட்சி கச்சாய்ப் பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில்

★ கப்டன் ஆனந்தரூபன் இராசன் ஜெகன் (யாழ் மாவட்டம்)

★ 2 ஆம் லெப். துஷிந்தா முத்துச்சாமி வினோதினி (நெடுங்கேணி)

இதே தினத்தன்று மட்டுவில் பகுதியில் இராணுவத்தினருடனான எதிர்பாராத மோதலின் போது சிறப்பு எல்லைப்படை வீரர்

★ அப்பன் பரமசாமி ராஜேஸ்வரன் (கிளிநொச்சி)

ஆகிய போராளிகள் தமது தரப்பில் உயிரிழந்துள்ளதாக விடுதலைப்புலிகள் அறிவித்துள்ளனர். (ந-7)

## வன்னி...

இராஜமனோகரி புலேந்திரனைத் தவிர ஏனைய ஏழு பேரும் தமது வேட்புமனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் பிறேமரத்ன சுமதிபால, புளொட் பாராளுமன்ற உறுப்பினர் வி. பாலச்சந்திரன். ரெலோ பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், ஈ.பி.ஆர்.எல்.எவ் பாராளுமன்ற உறுப்பினர்கள் இம்மானுவேல் சில்வா, இராசா குகனேஸ்வரன், கந்தையா பிறேமச்சந்திரன், முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் எஸ்.என்.எம். அபூபக்கர் ஆகியோரே வேட்புமனு தாக்கல் செய்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களாவர். (வ)

## வன்னியில்...

இருந்து இராஜமனோகரி புலேந்திரன் முதன்மை வேட்பாளராகவும் ஈ. பி. டி. பி. சார்பில் வன்னி மாவட்ட முதன்மை வேட்பாளராக சிலன் சிவகுமாரும் (ரகு) போட்டியிடவுள்ளனர்.

வன்னி மாவட்டத்தில் நேற்று வரை பதினொரு அரசியல் கட்சிகளும் நான்கு சுயேட்சைக் குழுக்களும் வேட்பு மனுவை தாக்கல் செய்துள்ளன.

இதேவேளை வன்னி மாவட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் வேட்பாளர்களை நிறுத்துவது தொடர்பாக ஆராய இன்று அவசர கூட்டமொன்றைக் கூட்டவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (வ)

# ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினர் நேற்று வேட்புமனு தாக்கல்

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி நேற்றுமாலை 4-30 மணியளவில் யாழ் செயலகத்தில் வேட்புமனுவைத் தாக்கல் செய்தது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் யாழ் மாவட்ட பிரதம அமைப்பாளருமான கே. வி. குகேந்திரன் (வி.கே. ஜெகன்), சுன்னாகம் பிரதேசசபையின் தலைவர் செல்வராஜா, நல்லூர் பிரதேசசபைத் தலைவர் க. மணிபல்லவராஜன் ஆகியோர் வேட்புமனுவைத் தாக்கல் செய்தனர்.

அக்கட்சியின் சார்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் பட்டியல் வருமாறு,

- டக்ளஸ் தேவானந்தா
- கார்த்திகேசு வேலும் மயிலும் குகேந்திரன்
- நடராசா மதனராஜா
- சங்கரப்பிள்ளை சிவதாசன்
- சின்னத்துரை தவராசா
- கலாநிதி காசிலிங்கம் விக்னேஸ்வரன்
- தம்பித்துரை சிவகுமரன்
- தியாகராஜா பாஸ்கரன்
- முகமட் அப்துல் கபூர் சபறுல்லா
- கந்தையா சங்கரன்
- செல்வராஜா சிறீதரன்

(12)

## சொல்லின்...

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் இழக்கு மாகாண ஆரம்பகால உறுப்பினரும் பாராளுமன்ற உறுப்பினருமான இவர் ஐக்கிய தேசிய ஆட்சிக்காலத்தில் இந்து கலாசார அமைச்சராக இருந்தவர் என்பதும் பின்பு சிங்கப்பூருக்கான இலங்கைத் தூதராகக் கடமையாற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ)

# வேட்புமனுத் தாக்கல்

(திருமலை)

எதிர் வரும் பொதுத் தேர்தலில்திருகோணமலைமாவட்டத்தில் நேற்று நான்கு அரசியல் கட்சிகளும் ஒரு சுயேட்சைக் குழுவும் வேட்பு மனுவைத் தாக்கல் செய்துள்ளது.

## பொதுமக்கள்...

உரிமையை மீறுவதற்கான காரணமாக அமைந்துள்ளது.

வவுனியாவில் கடந்த 10ந் திகதி முதல் 16ந் திகதி வரை பாதுகாப்புப் படையினரால் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏழு பேர் காணாமல் போயுள்ளனர். பொதுமக்கள் பலர் இராணுவத்தினரின் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளது. இம்முறைப்பாடுகள் தொடர்பாக அரசாங்கம் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## அம்பாறையில்...

மகாசபை சார்பில் சுயேட்சைக் குழுவாக போட்டியிடுவதற்கான வேட்பு மனுவை தாக்கல் செய்துள்ளது.


தம்பியப்பா கோபாலகிருஷ்ணன் தலைமையிலான வேட்பாளர் பட்டியலில்

ஈ.பி.டி.பி. சார்பில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சங்கர் குணசேகரம்

ரெலோ சார்பில் ஜே. பி. திலகசூரிய ஹென்றி மகேந்திரன்

புளொட் சார்பில் கணபதிப்பிள்ளை தம்பிராஜா

உட்பட 10 பேர் இந்த வேட்பாளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளனர். (வ-7)



## திருமண நல்வாழ்த்துக்கள்

இல்லறம் எனும் நல்லறம் புகும் புதுமணத் தம்பதிகள்

**திரு ந. லிங்கேஸ்வரன்**
(ஆசிரியர், யா/கோப்பாய் ம, வி.)

**திருமதி லலிதா லிங்கேஸ்வரன்**
(ஆசிரியை யா/இந்து மகளிர் கல்லூரி)

தம்பதிகள் பல்வகைப் பேறும் பெற்று
பாரினில் பல்லாண்டு வாழ
வாழ்த்துகின்றோம்.

அன்புடன்,
வலம்புரி நண்பர்கள்


வீணையே உங்கள் சின்னம்! சேவையே எங்கள் எண்ணம்!

யாழ்நகரை மீண்டும் கட்டியெழுப்பி
அச்சமற்று, நிம்மதியாய் வாழ
அளித்திடுவோம் எங்கள் வாக்குகளை
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சிக்கு!

(ஈ. பி. டி. பி)



ஈ.பி.டி.பி எடுத்த முயற்சியை அடுத்து யாழ்மாவட்டத்தில்மீளக்குடியமர்ந்துள்ள 6600 குடும்பங்களுக்குஇவ்வாண்டு உதவித் தொகையாக 6 கோடிரூபா வழங்கப்பட்டு வருகின்றது.

(இ/736)


இப்பத்திரிகை "வலம்புரி" [illegible] இல: 15, [illegible] யாழ்ப்பாணம் [illegible] செப்ரம்பர் [illegible] 03 [illegible]